www.padippakam.com

புதிய சமதர்மம்

Registered as news paper in Sri Lanka

உள்ளே...

ஈ.வெ.ரா. பெரியாரும்
**பிராமணியமும்**
— கலாநிதி விக்கிரமபாகு —

இதழ் -18 ரூபா 10.00 நவம்பர்-டிசம்பர் 1998 பக்கங்கள் 8

# தமிழினத்தை அழிக்க சந்திரிகா அமெரிக்காவை நாடுகிறார்!

கிளி நொச்சி சமர் முடிந்து சில நாட்கள் கழிந்த பின், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கு பற்றி விட்டு நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாராநாயக்க குமாரத்துங்க, அனுராதபுரத்திலுள்ள இராணுவ தலைமையகத்திற்கு விரைந்தார். வடக்கில் யுத்த முனைக்குச் சென்று நிலைமைகளை நேரில் கவனிக்க தான் பெரிதும் ஆவலாயிருப்பதாகவும், அதற்கு பாதுகாப்பு பிரிவினர் இடமளிக்கவில்லை எனவும் கவலை தெரிவித்தார். அமெரிக்காவிடமிருந்து இரா ணுவ உதவி பெற்றுக் கொள்வது அவசியமென அனுராதபுரத்தில் வைத்து படையினர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்ட போது, ஏற்கனவே அதே விடயமாக அமெரிக்க அரசாங்கத்திடம் தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், அதற்கான பதிலை எதிர்ப்பார்த்த வண்ணம் இருப்பதாகவும் ஜனாதிபதி அம்மையார் கூறிவைத்தார். வடக்கு கிழக்கை ஒரு வியட்நாமாக மாற்றுவதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவே எண்ண வேண்டியுள்ளது. ஐ.நா. கூட்டத்திற்குச் சென்றிருந்த சமயம் ஜனாதிபதி கிளின் னுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக ஜனாதிபதி சந்திரிகா கூறி வைத்தது ஞாபகத்திற்கு வருகிறது. பிரச்சினைக்கு வேண்டிய நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு திறனற்ற சந்திரிகா அரசாங்கம் இராணுவ தீர்வில் நம்பிக்கை வைத்து காலை ஆழப்புதைத்து விட்டு இரண்டும் கெட்டான் நிலையில் திணறிக் கொண்டிருக்கிறது.

இந்த பரிதாப நிலையைக் கண்ட வர்த்தக மற்றும் தொழிலதிபர்கள் அணிந்து கட்டிக் கொண்டு, தனியார் துறை சம்ராஜ்யத் தலைவர் லலித் கொத்தலாவலையின் தலைமையில் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தனர். இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் எந்திரமாக விளங்கும் நாம் எரிந்துக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உழைக்க வேண்டிய காலம் வந்து விட்டது என பறை சாற்றிக் கொண்டு, தொழிற் சட்டங்கள் இறுக்கமாக்கப்பட வேண்டும், விடுமுறைகள் துண்டாடப்பட வேண்டும் என்றெல்லாம் திட்டம் தீட்டிக் கொண்டு முன்வந்துள்ளனர். லலித் கொத்தலாவலை முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் மருமகன் ஆவார். ஒரு வடிகட்டிய வலது சாரியாக விளங்கியவர் என்பது நாடறிந்த விடயம். மறு புறத்தில்; ஜனாதிபதி சந்திரிகாவின் பாட்டனார் சொலமன் டயபுல் பண்டாரநாயக்க பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முழு விசுவாசியாக விளங்கியவர். அம்மையார் தகப்பன் முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க முற்போக்குச் சிந்தனையாளராக காட்சியளித்து, இனவாதத்தை தழுவி, பின்பு அதற்கு இரையானவர். சந்திரிகா அம்மையார் ஆரம்ப காலத்தில் முற்போக்காளராக, சோசலிச வாதியாக வலம் வந்த பின், இன்று ஏகாதிபத்திய சக்திகளின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக விளங்குகிறார். ஆயினும் தமிழ் தேசிய இனப்பிரச்சனையைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ கையாலாகாத்தனமே எஞ்சியுள்ளது.

இந்த நிலையில் தான் லலித் கொத்தலாவலைகள் அம்மையாருக்கு கை கொடுக்க முன் வந்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் தான் அமெரிக்க இராணுவ உதவியும் கோரப்படுகிறது. இந்த உதவியானது ஏற்கனவே இருந்ததே "கீறின் பெறெட்ல்" பிரிவினர் இங்கு முகாமிட்டு பயிற்சியளித்து வந்தது பகிரங்க இரகசியமாகும்.





இப்பொழுது அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து பெரிய அளவிலான உதவியே கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. எனவே தான் பண்டாரநாயக்கா மார்களும் கொத்தலாவலகளும் சேர்ந்து தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தையும், மறுபுறத்தில் தொழிலாளர் போராட்டங்களையும், ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல், ஒருங்கே நசுக்கி விடலாம் என எண்ணி ஒன்றாக களத்தில் இறங்குகின்றனர். வர்த்தக மற்றும் தொழில் அதிபர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியை ஜனாதிபதி

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## குமார் பொன்னம்பலத்தின் பின்னால் தொடர்கின்றது பொலிஸ்!

இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரான குமார் பொன்னம்பலம் சமீபத்தில் கொடுத்த தொலைகாட்சி பேட்டியில் "விடுதலை புலிகளின் ஆதரவாளன்" என்று கூறியதாக அவரை பலவிதமாக தொலை பேசி மூலமும், வேறு வழிகளினாலும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஆக்கிரமித்திருப்பதாகவும் பொலிஸ் விசாரனை ஆரம்பமாக இருப்பதாக அறியப்படுகின்றது. பல தமிழ்த் தலைவர்கள் என்று தம்மை தம்பட்டம் அடிப்பவர்கள் தமிழ் மக்கள் படும் துன்பம் தெரிந்தும் தெரியாதது போல் பாராளுமன்றத்தின் கதிரைகளைக் கட்டிப் பிடித்திரப்பவர்களை விட பிரபல சட்டத் தரணியான குமார் பொன்னம்பலம் நாட்டில் நடக்கும் பேரழிவான யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தை வேண்டும் தமிழர் தாயக பூமிக்காக போராடும் விடுதலைப் புலிகளின் விடுதலை யுத்தம் சரியானதென்று கூறுவது பிழையெனக் கருத முடியாது. ஒவ்வொருவருக்கும் இந்த நாட்டின் பிரைஜை என்ற வகையில் தம் உரிமைக்காகப் போராட உரிமை உண்டு.

## 1999ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பாமர மக்களை ஆயுதம் தூக்கச் செய்கிறது.

1999ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், பெரும் சிக்கலி லுள்ள நாட்டின் பொருளாதார த்தை முற்று முழுதாக மூடி மறைக்கும் நடவடிக்கையாக அமைகின்றது. பேரழிவான யுத்த மும், உலக பொருளாதாரத்தின், தளம்பலும், பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்துள்ளது. இதே நேரத்தில் அரசதுறைக்கான முதலீட்டு வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பேராசிரி யர் பீரிஸ் ஆதாள பாதாளத்து க்குச் சென்றுள்ள பொருளாதா ரத்தை மூடி மறைப்பதற்காக, வெறும் வார்த்தைகளாலும், போலி யான புள்ளி விபரங்கள் மூலமும், சீர் செய்யப்பார்க்கின்றார். உண் மையாகவே வளர்முக நாடுகளின் 5% பொருளாதார வளர்ச்சி என்பது, பொருளாதார வளர்ச்சியே அல்ல.

"தெற்காசிய நாடுகளில் எமது நாடு தான், பொருளாதார வளர்ச் சியில் உயர்ந்துள்ளது, என்று கூறுவது மிகவும் வேடிக்கையானதாகும்.

சுய தொழில் முயற்சியை ஊக் குவிப்பதோடு, வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்க முடியும், என்று கூறுவதன் மூலம், அரசாங்கம் வெளிப்படையாகவே, ஒப்புக் கொள்கிறது, எதிர்கால த்தில் அரச முதலீட்டுக்கான வாய் ப்புகள் இல்லை என்று பட்டதாரி மாணவர்களினதும், மற்றும், சமுர்த்தி உத்தியோகத்தர்களி னதும், ஆர்ப்பாட்ட நடவடிக்கை கள், இளைஞர்கள் மத்தியில் நிலவும் அதிருப்தியின் சிறிய வெளிப்பாடாகும்.

மனித வள அபிவிருத்தி திட்டங்கள், எனப்படுவது மூலம், திடீர் பரிகாரம் காண்பதற்கு நிதியமைச்சர் முயற்சிப்பது, ஒரு செப்படி வித்தையாகும். இத்த கைய தவறான கொள்கைகள் பிரச்சனையை மேலும், மோசம டையச் செய்யவே வழி வகுக்கும். ஏன்னென்றால் ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினர் சிலர், இதன் மூலம் நன்மை அடையளாம். ஆசியாவில் ஏற்பட்ட பொருளா தார நெருக்கடி அம்பலப்படுத் தியது என்ன வென்றால், வெளிநா ட்டு தனியார் துறைக்கு முக்கிய த்துவம் கொடுக்கும் அபிவிருத்தி மாதிரியானதே இதற்கு காரணம் என்பதை இதனை சிறிதும் உணராத வகையிலேயே பேராசி ரியர் பீரிஸ் தனியார் துறைக்கு சலுகைகளை வாரி வழங்கியுள் ளார். அதே நேரத்தில் பாமர மக்க ளுக்கு சுமைகள் மேலும் கூடியுள் ளன. வெளி நாட்டில் வேலை செய்து விட்டு திரும்பும் பெண் தொழிலாளர்களுக்கு இருந்த அனேக வறுகைகள் நீக்கப்பட்டுள் ளன.

இந்த வரவு செலவுத்திட்டம் தெளிவாக ஒன்றை உணர்த்து கின்றது. அதாவது அரசாங்கம், ஏகாதிபத்தியத்தின், கைதியாக இருப்பதால், அதனால், பொது மனிதனுக்கு எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது. எனவே வரவு செலவுத்திட்ட உரை யானது ஏழ்மையில் மூழ்கியுள்ள பாமர மக்களை ஆயுதம் ஏந்தும் வண்ணம் அறை கூவல் விடுப்பதாக அமைகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



# நீதியமைச்சர் ஜீ.எல்.பீரிஸை தலைகுனிய வைத்த சோகங்கள்!



அண்மையில் வெள்ளவத்தை பகுதிக்கு கௌரவ நீதி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வருகை தந்திருந்தார். இவரின் வருகைக்கான நோக்கம் கொழும்பு மாநகரில் தமிழ் மக்களுக்கு எதிராக புரியப்படும் அநீதிகளை இனங்காண்பதற்கும், அவற்றை எப்படி குறைக்கலாம் என்பதை ஆராய்வதற்காகும். பொது மக்களை நேரடியாகச் சந்திக்கும் இவ்வைபவத்திற்கு திரு யோகேந்திரா துரைச்சாமி தலைமை தாங்கினார்.

இக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சிலர் தெரிவித்த தகவல்கள் மக்களின் மனதை பெரிதும் வேதனைக்குள்ளாகியது. இக் கூட்டத்திற்கு வந்திருந்த பண்ணாகத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் தனக்கு இழைக்கப்பட்ட துயரத்தை மிகவும் மனம் நொந்து விளக்கினார். தான் முன்னைநாள் எதிர்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்தின் உறவினர் என்றும், தங்களின் மூன்று ஆண் சகோதரர் என்றும் தாங்கள் அநியாயமாக பொலிசாரால் இம்சிக்கப்பட்டதாயும் தெரிவித்தார். தனது சகோதரன் ஒருவரை மூன்று முறை பொலிசர் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருந்தனர் என்றும் கூறினார். கௌரவமான குடும்பத்தை சேர்ந்த எங்களை ஏன் இப்படி தண்டிக்கின்றீர்கள் என அமைச்சரைப் பார்த்து அந்த இளைஞன் வினாவினான். தேர்தல் ஒன்று வர இருப்பதால் தான் நீங்கள் தற்போது இங்கு வந்துள்ளீர்கள் என்றும் அவ்விளைஞன் கூறினான். அடுத்து கொழும்பில் 40 வருடத்துக்கு மேலாக வெள்ளவத்தை 37ம் ஒழுங்கையில் வசிக்கும் ஒருவர் தனது குறையை எடுத்துக் கூறினார். தான் நாற்பது வருடமாக கொழும்பில் இருந்தும் வெள்ளவத்தை பொலிசார் தனக்கு வதிவிட பத்திரம் தருகிறார்கள் இல்லை. கடந்த இரண்டு வருடமாக நான் அலைக்கழிந்து திரிகின்றேன். இதனால் வெளிநாட்டில் இருக்கும் எனது உறவினர்களை என்னால் சந்திக்க முடியாது இருக்கின்றது என்று வருத்தத்துடன் தெரிவித்தார். அமைச்சரும் அவர் தெரிவித்தது நியாயமானதாக இருக்கிறது, இவர்கள் ஏன் இப்படி செய்கிறார்கள் என்பது போல் குழம்பினார். இக் கூட்டத்திற்க வந்திருந்த ஒரு முதியவர் தெரிவித்த புகார் மிகவும் அதிர்ச்சியடையக் கூடியதாக இருந்தது. இவர் கூறியதாவது, தனக்கு தெரிந்த ஒரு 10 அங்கத்தவரை கொண்ட குடும்பம் ஒன்று பொலிசாருக்கு மாதம் 25000 ருபா கொடுப்பதாகவும், அப்படி கொடுக்காவிட்டால், கைது செய்து தடுத்து வைக்கின்றார்கள். மீண்டும் அவர்கள் பணம் கட்டியவுடன் விடுதலை செய்கிறார்கள் என்றார்.

சினிமா தயாரிப்பாளரான க.தேவதாசன் தனது சங்கத்தின் முக்கிய அங்கத்தவர் ஒருவர் கடந்த எட்டு மாதங்களாக எது வித விசாரணையும் இன்றி தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்றார். அத்துடன் தன்னையும் பொலிசார் பல முறை கைது செய்ததாகவும், தன்னை சங்கிலியால் பிணைத்து நீதிமன்றத்துக்கு கொண்டு வந்ததைப் பார்த்த தனது பிள்ளை பொலிசாரை கண்டால் வெறுப்புற்றுவராக காணப்படுகிறார். தன்னை விடுதலை செய்வதற்காக கட்டப்பட்ட பிணைப் பணத்துக்கு என்ன நடந்தது என்பதை அறிய முடியாமல் உள்ளதாயும் தன்னைப் போல் ஆயிரக் கணக்காணவர்கள் பிணைப் பணம் செலுத்தி மீண்டும் எடுக்க முடியாமல் உள்ளார்கள் என்றும் கூறினார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கை மூலம், தொடர்கதையாக வந்து கொண்டிருக்கும் இப் பிரச்சினைகளுக்கு சிறு வைத்தியம் செய்து தமிழ் மக்களை நீண்ட காலமாகவே ஒரு அந்நிய பிரசைகள் ஆக வைத்திருக்க அரசு முயல்கின்றதா? அல்லது தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வை வழங்கி அவர்களை அவர்களது சொந்த மண்ணில் கௌரவத்துடன் விடப்போகிறதா?

# தமிழர் சரித்திரம் கூற யாரும் இல்லை! பொன்னாடை கௌரவம் பெற பலர் உளர்!

வரலாற்றை புறக்கணித்து, காட்டிக் கொடுக்கும் தமிழ் அரசியல் வாதிகளும் பொன்னாடைப் புத்திஜீவிகளும் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இனவாத சிங்கள அரசாங்கங்கள் ஆண்டாண்டு காலமாக தமிழர் வாழ்ந்த பிரதேசங்களை மாற்றி இலங்கையை சிங்கள நாடாக முழு உலகிற்கும் காட்டும் நடவடிக்கைகளை சற்றேனும் குறைத்ததாக தெரியவில்லை. பல இனவாத சிங்கள புத்திஜீவிகள் சரித்திரத்தையே மாற்றி பல கோணங்களில் புத்தகங்களை வெளியிடுகின்றனர். இந்த நாட்டில் ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி என்றாலும்சரி முன்பு பதவியில் இருந்த தலைவர்கள் என்றாலும் சரி தமிழ் மக்களை தமது வார்த்தைகளால் நோகடிக்காதவர்கள் எவரும் இல்லை என்றே கூற வேண்டும். இவைகளை கண்டும் காணாத மாதிரி தமிழ் புலவர்கள், தமிழ் புத்தி ஜீவிகள், தமிழ் வரலாற்று விரிவுரையாளர்கள், கூறப்போனால் தம்மைத்தாமே புகழும் கூட்டம் ஒன்று குளிர் காய்ந்து கொண்டிருக்கிறது. இக் கதாசி வேங்கைகள், தமக்கென ஒரு கூட்டத்தை வைத்து, அடிக்கடி பொன்னாடை கௌரவம் பெறுவும், பட்டங்களை வாங்குவதுமாக தமது காலத்தை "இனிமை"யாக கழிக்கின்றனர்.எழுதுவதோ சித்தாந்தம், சிறு கதை சில கவிதைகள், இவர்களால் எரியும் நெருப்பில் வாழும் தமிழர்களுக்கு எதுவித பலனும் இல்லை. இவர்கள் முதுகெலும்பில்லாத வெறும் பதர்களாகவே உள்ளனர்.

இவர்களது நடவடிக்கைகளை அவதானிக்கம் போது, இந்த நாட்டின் வரலாற்றை மாற்றி அமைக்கும் நடவடிக்கைக்கு இவர்களும், துணை போவது போல் தெரிகிறது. இதற்காக இவர்களுக்கு அரசில் உயர் பதவிகள், கௌரவ பட்டங்கள், வெளிநாட்டு சுற்றுலாக்கள் எல்லாமே தாராளமாக கிடைக்கின்றன. இனம் எக்கேடு கெட்டாலும் இவர்களுக்கு கவலை இல்லை.

1977 வரை தமிழ் அரசியல் வாதிகள் போர் முழக்கங்களே செய்து வந்தனர். பின்பு பாராளுமன்ற சுகபோகங்களில், தம்மை மறந்த நிலையில் வாழ்கின்றனர். அன்று இவர்கள் தென் இலங்கையுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புகளையும், காரசாரமாக விமர்சித்தனர். பலருக்கு தண்டனையும் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்று அரசை புகழாத தமிழ் பாராளமன்ற உறுப்பினரே இல்லை என்று கூறலாம். இன்று தமிழ் மக்கள் வரலாற்றில் என்றுமில்லாத அளவில் துன்புறுத்தப் படுகின்றனர். தமிழ் பகுதிகளின், காடுகள், இயற்கை வளங்கள் யாவும் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றன. வன்னி மாவட்டம் பஞ்சத்தால் சின்ன எதியோப்பியாவாக மாறியுள்ளது. ஆனால் இவ்வளவு அநியாயங்களுக்கும் மூலமாக இருக்கும் அவசர காலச்சட்டத்துக்கு சில தமிழ் கட்சிகள் இன்றும் ஆதரவளிக்கின்றன.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் தென் ஆபிரிக்காவில் உள்ள டேர்பன் நகரில் தெரிவித்ததாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய கருத்து பற்றி நவசமசமாஜ கட்சியும் தமிழ் காங்கிரசையும் தவிர வேறு எக்கட்சியும் என வாய்திறக்கவில்லை. உண்மையில் அதிகார ஆதிக்கம் மிக்க ஜனாதிபதி முறையும் 1978ம் ஆண்டு அரசியலமைப்புமே இந்த நாட்டை இரத்த ஆறு ஓடச் செய்யும் நிலைக்கு கொண்டு வந்ததற்கு ஒரு காரணமாகும். அத்தகைய சர்வாதிகார ஜனாதிபதி முறையினை ஒழிப்பது தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு விருப்பம் இல்லை இன்று தமிழ் பிரதிநிதிகள் என்றாலும் சரி தான் அரசோடு ஒட்டி உறவாடும் தமிழ் புத்திஜீவிகள் என்றாலும் சரிதர்ன் தாம் செய்யும் வரலாற்றுத் தவறை உணர்ந்ததாக தெரியவில்லை.

"பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலைக் குடிப்பது" போன்று இவர்கள் செயற்படுகின்றார்கள்.

மிக நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தான் பாராளுமன்றமோ அரசியலோ செல்ல வேண்டும் என்று கொண்டிருந்த நம்பிக்கையை இப்போது தமிழ் மக்கள் நிச்சயம் மாற்றியமைப்பார்கள். நாம் கொழும்பில் செய்வது கிராமங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு எங்கே தெரியப் போகிறது என்று கூட சில புத்திஜீவிகள் எண்ணலாம் ஆனால், ஒவ்வொரு தமிழ் புத்திஜீவியும், தனது மனசாட்சிக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

நேதாஜி

# துபாயில் இலங்கை பெண் தொழிலாளர்களுக்கு அடி உதை!

துபாய் நாட்டில் உள்ள "ஜபி அலி" என்னும் ஆடைதைக்கும் தொழிற்சாலையில் இலங்கையைச்சேர்ந்த பல பெண்கள் தொழில் புரிந்து வந்துள்ளனர். மிக நீண்ட காலமாக இத் தொழிற்சாலை நிர்வாகம் இப் பெண் தொழிலாளர் களுக்கான வேதனத்தை கொடுக்காது ஏமாற்றி வந்துள்ளது. பொறுமை இழந்த பெண்தொழிலாளர் தமது வேதனத்தை வழங்கக் கோரி மறியலில் போராட்டம் செய்துள்ளனர். நிர்வாகம் பொலிசாரின் உதவியை நாடியிருக்கிறது. துபாய் பொலிசார் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் தொழிலாளர்களை ஈவிரக்கம் இன்றி மிருகத்தனமாக வதைத்து உள்ளனர். தொழிலாளரின் நியாயமான கோரிக்கைக்கு துபாய் பொலிஸ் தனது தாராள குணத்தை காட்டியிருக்கிறது.

இது சம்பந்தமாக இலங்கை அரசு மெத்தனப் போக்கையே கடைப்பிடிக்கிறது. உண்மையில் இலங்கை அரசும் தனது நாட்டில் தொழிலாளர் போராட்டம் செய்யும் போது துபாய் பொலிசாரின் உதாரணத்தையே பின்பற்றுகிறது. இதன் காரணத்தினால் தான் இலங்கை அரசு மௌனமாக இருக்கிறது என்பது புலனாகிறது. அந்நியச் செலாவணி வருமானத்தில் பெருமளவு தொகை வெளிநாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மூலமே கிடைக்கின்றது. இப்பணத்தை பெறுவதற்காக இலங்கை அரசே தொழிலாளர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கின்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்களுக்கு நல்ல "கிராக்கி" இருப்பதால் பணிப் பெண்களாக இந்நாட்டு பெண்களை அனுப்புவதிலும் இலங்கை அரசு அதிக கரிசனை காட்டுகிறது. ஆனால் பணிக்காகச் செல்லும் பெண்கள் அந்நாடுகளில் படும் துன்பங்களை அரசு கண்டு கொள்வதாக காட்டிக் கொள்ளவில்லை.

துபாய் நாட்டு பொலிசார் இலங்கை பெண்களை அடித்தால் என்ன கொன்றால் கூட இலங்கை அரசு அக்கறை காட்டியிருக்காது. ஏன் என்றால் மரணம் என்பது இலங்கை அரசுக்கு மரத்துப் போன செய்தியாகும்.

## தமிழினத்தை அழிக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திரிகா பெரிதும் பாராட்டியுள்ளார். அதே நேரத்தில் மேற்படி அதிபர்களும் அம்மையார் வழங்கும் ஒத்துழைப் புக்கும் தான் நேரடியாகவே கலந்துரையாடல்களில் பங்கு பற்றுவதற்கும் தயாராயிருப்பதாக அறிவித்ததற்கும் மிகுந்த பாராட்டுக்களை நல்கியுள் ளனர். அரசாங்கமும் தனியார் மயம், முதலாளிகளும் இன்பமயம்! 1994 ல் சந்திரிகா அம்மையாருக்கு மக்கள் இதற்காகவா ஆணை வழங்கினர்? இல்லை.

இந்த நிலைக்கு எதிராக கிளர வேண்டிய சக்திகள் இருக்கவே செய்கின்றன. உண்மையில் அனைத்து மக்களும் இன்று நீறு பூத்த நெருப்பு என்ற நிலையில் உள்ளனர். யுத்தத்தால் ஏற்படும் உயிரழிப்புகளால் மட்டும் தென்னிலங்கை மக்கள் கலங்கிப் போயுள்ளனர். வட பகுதி மக்கள் எதிர்நோக்கும் அழிப்புகள், அவலங்கள் சொல்லும் தரமற்றவை.

எனவே தான் அனைத்து இடது சாரி மக்களும் தேசிய விடுதலைப் போராட்ட சக்திகளும் ஒன்று திரண்டு, கை கோர்த்து எதிரே வந்து கொண்டிருக் கும் நாசகார சக்திகளுக்கெதிராக சலிக்காமல் போராடுவது இனி மேலும் தள்ளிப் போட முடியாத வரலாற்றுக் கட்டாயமாகி விட்டது. ஆட்சியாளர் களும் அவர்களுக்கு முண்டு கொடுக் கும் சக்திகளும் நாட்டின் ஏழை எளிய உழைக்கும் மக்களின் நலன்களில், அதாவது பெரும்பான்மையான மக்க ளின் நலன்களிள், அக்கறையற்ற ஏகாதிபத்தியத்தின் விசுவாசிகள், அதன் ஏவல் நாய்கள் என்பதை அடக்கி யொடுக்கப்படும் எந்தவொரு இன மதத்தை சேர்ந்த பிரஜையும் மறந்து விடக் கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



# ஜேர்மனியில் மாற்றம்: புதிய உலக இடதுசாரிஅலையின் ஆரம்பம்!

பிரித்தானிய சாம்ராஜ்யத் தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என ஒரு காலத்தில் பேசப்பட்டதல்லவா? அது போலவே தன்னை இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் எண்ணலாம். முன்னாள் சோவியற் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனிக் காட்டு ராஜா போல் அதிக அரக்கத் தனத்துடன் செயற் பட்டு வருகிறது. வறிய நாடுகளுக்கு மேலும் வறுமையை ஏற்படுத்தல் மற்றும் மனம் போன போக்கில் ஈராக், ஆப்கானிஸ்தான், சூடான், லிபியா, கிறனடா போன்ற நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தனக்கு அதிகாரமுண்டு என திமிர் கொண்டு அது செயற்பட்டு வருகிறது. இந்த நிலைக்கு ஒரு முடிவு வர வேண்டும். வரத்தான் போகிறது என்பதை இன்று காணலாம். உலகத்தில் ஒரு புதிய அலை வீச ஆரம்பித்தள்ளது. அது பரவிக் கொண்டிருக்கிறது. அது வலுப்படுத்தப்படவேண்டும்.

### ஜேர்மனியில் ஸ்குறோடரின் வெற்றியும் பிரெஞ்சுப்பிரதமரின் வாழ்த்தும்

அண்மையில் ஜேர்மனியில் இடம் பெற்ற தேர்தலில் ஏகாட் ஸ்குறோடர் அதிபராக தெரிவு செய்யப்பட்டது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இது ஒரு மாபெரும் வெற்றி என வர்ணித்த பிரிட்டிஷ் பிரதமர் ரோனிபிளெயர், பிரான்ஸ், இங்கிலாந்து ஜேர்மனி ஆகிய 3 நாடுகளும் ஒரு கண்ணோட்டத்தை பகிர்ந்து கொண்டிருப்பதாக கூறியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனை ஆதரிப்பவராகிய பிளெயர் தெரிவித்துள்ள கருத்தானது அவருக்கே தெரிந்த அர்த்தத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால் பிரெஞ்சு பிரதமர் லயனல் ஜொஸ்பின் ஜேர்மனிய மக்கள்வேலைவாய்ப்பையும் சமூக நீதியையும் கொண்ட சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்கு மிகுந்த வேட்கை கொண்டிருக்கிறார்கள் என்பதையே தேர்தல் முடிவு காட்டுகிறது" என நிதானமாகக் கூறியுள்ளது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய கருத்தாகும்.

### இடது சாரிகள் உற்சாகமடையக் கூடிய போக்குகள்

ஜனாதிபதி பில் கிளின்ரன் "மிக விசுவாசமாக வாழ்த்துகிறேன்." குறிப்பிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "நானும் அவரும் (ஸ்குறோடரும்) அண்மையில் பேளினிலும் வாசிங்ர னிலும் நன்றாக கலந்துரையாடினோம். அவரிடம் நான்நெருக்கமாக.இருந்து செயற்படுவேன் என்று குறிப்பிட்டுள்ளார். கிளின்ரன் ஜேர்மன் தலைவர் ஸ்குறோடரை தனது பக்கம் ஈர்ப்பதற்கு முயற்சி க்கிறார். என்பது தெரிகிறது. புதிய ஜேர்மன் அரசாங்கம்ஒரு சிவப்புபச்சை, கூட்டரசாக (Red-Green coalition) தான் அமையப்போகிறது. அதற்குள் வலது சாரிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். உதாரணமாக, பொருளாதார அமைச்சராக பதவியேற்க விருந்த ஜொஸ்ட் ஸ்ரொபில்மென் என்பவர் மத்திய தர வகுப்பினரின் ஆதரவுடனான வலது சாரியும், பண முதலையும், பெரிய வர்த்தகரும் ஆவர். அவர் அமைச்சர் பதவியை ஏற்கவில்லை. மறுபுறத்தில் இடது சாரியும், சமூக ஜனநாயக கட்சியின் தலைவருமாக விளங்குபவ ரும், கீழ் மட்டத்தினரின் ஆதர வைக் கொண்டிருப்பவருமாகிய ஒஸ்கார் லவொன்ரின் நிதி அமைச்சர் பதவியைப் பெற்றுள் ளார். இவரின் செல்வாக்கு பொரு ளாதாரத் துறையில் நிச்சயமாக இருக்கத்தான் செய்யும் இவரின் கைதான் மேலும் ஓங்கும். ஸ்குறோடர் அரசாங்கத்தில் "அகப்பை பிடிப்பவர்" இவராகத்தான் இருப்பார் என்ற கருத்து சற்று வலுவாக உள்ளதைக் காணலாம். இது ஒரு புதிய திருப்பம், ஒரு புதிய அலை என உலக இடதுசாரிகள் எண்ணிச் செயற்படுவதற்கு உற்சாகமளிப்ப தாகவுள்ளது என்றால் அதுமிகையல்ல.

### சுவீடன், இத்தாலி மாற்றங்கள்

அண்மையில் சுவீடன், இத் தாலி போன்ற நாடுகளில் இடதுசாரி சக்திகள் ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். உலக, ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்திகள்

### ஏகாதிபத்தியத்தின் 3 அம்சத்திட்டமும் கிழக்காசிய சீர்குலைவும்

சோவியற் ஒன்றியம் வீழ்ச்சியடைந்தவுடன் சோசலிசம் மரணி த்து விட்டது என ஏகாதிபத்திய வாதிகள் அகமகிழ்ந்து கொண்டாட்டம் நடத்தினர். உலகத்தை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் தனது கையில் உள்ளது என்ற இறுமாப்புடன் மேற்படி சக்திகள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் மூலம் வறிய நாடுகளை மேலும் சிதைத்து வருகின்றன. உலக மயமாக்கல், தாராளமயப்படுத்தல், தனியார் மயப்படுத்தல் எனும் மூன்று அம்ச நிலைப்பாட்டிலிருந்து பல் தேசிய கம்பனிகளுக்கு பல நாடுகளை தமது பிடியில் வைத்திருப்பதற்கு அவை வழி சமைத்தன. கிழக்கு ஆசிய நாடுகளில் நிதி நெருக்கடியையும் பொருளாதார வீழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய நெருக்கடியானது அண்மைக்கால வரலாற்றில் மெக்சிக்கோவில் ஆரம்பித்தது. காலப்போக்கில் அதுஇந்தோனேசியா, தென்கொரியா, தாய்லாந்து ஹொங்கொங், மலேசியா நாடுகளுக்கும் பரவியுள்ளது. அது மட்டுமல்லாமல், G 7 நாடுகளில் ஒன்றாக விளங்கும் ஜப்பானின் நிலையும் வீழ்ச்சிக்கண்டுள்ளது. ஏனைய ஆசிய நாடுகளும் மேற்படியான நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கக் கூடிய சூல்நிலை தான் உள்ளது என்பது பொருளியல் ஆய்வாளர்களின் அபிப்பிராயமாகும்.

### ஐரோப்பிய சோசலிச சக்திகள் மகிழ்ச்சி

அதே நேரத்தில் இன்று ஜேர்மனியில் ஏற்பட்டிருக்கும் மாற்றமானது ஐரோப்பிய சோசலிச சக்திகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸ், ஸ்பெயின், போத்துக்கல் சுவிடன் இத்தாலி ஆகிய நாடுகளை உதாரணமாகக் கூறலாம். இச்சந்தர்ப்பத்தில் ஸ்குறோடரின் வெற்றியை பாராட்டிய நோர்வே பிரதமர் கியெல் மக்னே போட்வி " இது ஜேர்மன் அரசியலில் ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்துள்ளது, ஒரு புதிய வரலாற்று கட்டத்தை தோற்று வித்துள்ளது" என்று கூறியுள்ளார்.

### இன்றைய கிழக்காசியா நிலை உலம் முழவதும் பரவாது என்பதற்கில்லை

1917ல் இடம் பெற்ற ருசிய புரட்சியையடுத்து ஜேர்மனியிலேயே 1920 களில்அது நிகழும்என எதிர்பார்த்திருந்த போதும் அது கை கூடவில்லை. உலகில் குறிப்பிட்ட தொருகாலப் பகுதியில் எதிர்பார்ப்பது போல்யாவும் சம்பவிக்கும் என்பதற்கில்லை. ஏறத்தாழ வருடங்கள் கழிந்த பின்னர் தானும் ஜேர்மனியில் இன்று ஏற்பட்டிருக்கும் மாற்றம் நிச்சயமாக உற்சாகம் ஊட்டும் நிகழ்வாகும். உலக இடது சாரி சக்திகளுக்கு புத்துயிர் அளிக்கும் திருப்பமாக இது அமைகிறது. மேற்குறிப்பிட்ட ஏகாதிபத்திய 3 அம்சத்திட்டமும், அது 3வது உலக நாடுகளுக்கும் ஏற்படுத்தி யுள்ள நிலையானது வளர்ச்சிய டைந்த நாடுகளையுமேநாளைபாதிக்கமாட்டாது என்று கூற முடியாது. அவ் நாடுகளில் உள்ள எண்ணற்ற மக்கள் ஏற்கனவே வேலை வாய்ப்பின்மையால் வறுமை நிலைக்குத் தள்ளப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஏன் வேலை செய்யும் நடுத்தர வகுப்பினர் கூட வறுமை நிலையை எதிர் நோக்கிய வண்ணமே உள்ளனர்.

### இடது சாரிகள் முற்போக்கு சக்திகள் முன்னுள்ள வரலாற்றுக் கட்டாயம்

எனவே தான் உலகம் முழுவதிலும் உள்ள இடதுசாரி, முற்போக்கு சக்திகளுக்கும் பல லட்சம் உழைக்கும் மக்களுக்கும் ஒரு ஒளிமயமான எதிர்காலம் பிறக்கிறது என எண்ணிக் கொண் டிருப்பதைக் காட்டிலும், புதியதொரு சகாப்தத்தினை உருவாக்குவோம் எனதிட சங்கற்பம் கொண்டு, அதற்காக கடுமையாக உழைப்பதே எம்முன்னுள்ள வரலாற்றுக் கட்டாயமாகும்.

-அகிலநேசன்

# 150 வயதை எட்டியுள்ள பொதுவுடமை அறிக்கை!



மனித குலத்தின் மேம்பாட்டிற்கென உலக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் பல்வேறு நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. விவிலியம், உபநிடதம், திருக்குறள், திருகுறள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் மனித குலம் ஒட்டு மொத்தமாக எவ்வளவு பயனடைந்துள்ளது என்பதை யாரும் அறிவர்.

இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் பொதுவுடமை அறிக்கை எனப்படும் நூலினை கார்ல் மார்கஸ் இயற்றினார். உலகில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சமூக வடிவங்கள் இருந்து வந்துள்ளன என்பது வரலாறு. அவை தனி வேறாக ஆராயப்பட வேண்டியவையாகும். கார்ள் மார்கஸ் தான் தனது முன்னோடிகளான ஹெகெல் (Hegel) மற்றும் பியூவர்பாக் (Fuerbach) ஆகியோரின் ஆக்கங்களை ஆய்வு செய்ததன் பயனாக பொருள் முதல் வாதம் எனும் கோட்பாட்டினை சிருஷ்டித்தார்.

வர்க்கப் போராட்டங்களின் வரலாறு தான் உலக வரலாறு எனும் நோக்கு நிலையிலிருந்து உலகம் முதலாளி வர்க்கம் மற்றும், தொழிலாளி வர்க்கம் என இரு வேறு முகாம்களாக பிரிக்கப்பட்டிருப்பதை மார்கஸ் எடுத்துக் காட்டினார். ச்ர்வதேச உழைக்கும் மக்கள் சங்கம் எனப்படும் அமைப்பு உருவாக்கப்பட்ட அக் காலகட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கென ஒரு சாசனம் எழுதப்பட வேண்டுமென்று எண்ணியதன் பயனாகவே பொதுவுடமை அறிக்கையினை கார்ள் மாக்ஸ் படைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ் அறிக்கையானது ஒரு கை நூல் வடிவம் கொண்'டிருந்த போதும், அது பல புத்தகத் தொகுதிகளுக்கு ஒப்பானதாகும் என லெனின் குறிப்பிட்டிருக்கிறார். பாட்டாளி வர்க்கத்தின் ஏனைய அனைத்து மக்களையும் சுரண்டி, உண்டு கொழுத்து அடக்கியாளும் நிலைமையை மாற்றியமைத்து, பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் கைக்கு ஆட்சி அதிகாரம் மாற வேண்டும், அது தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனப்படுவது, அதனூடாகவே உண்மையான ஜனநாயகத்தை எட்ட முடியும்இ எனவே மார்கஸின் சிந்தனை அமைந்திருந்தது. மார்க்ஸ் தனது இருக்கையில் சற்று உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் உயிர் நீத்தார். இச்சந்தர்ப்பத்தில் இரங்கலுரையாற்றிய எங்கல்ஸ் "19 ம் நூற்றாண்டின் மிகத்த தலை சிறந்த சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்தி விட்டார்" என குறிப்பிட்டிருந்தார். மார்க்ஸ் என்றும் உழைக்கும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பார். அவர் நல்கிய அந்த பொதுவுடமை அறிக்கையானது அனைத்து உழைக்கும் மக்களுக்கும் ஏனென்றும் சிந்தனைக்கு விருந்தாகவும், அவர்களின் அபிலாசைகளுக்கு அருமருந்தாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மார்க்ஸ் எவ்வளவு தொலை நோக்குடையவர், அவருடைய உலக் பார்வை எவ்வளவு முழுமையானது என்பதற்று பொதுவுடமை அறிக்கை சிறந்த சான்றாகும்.


இன்றைய உல கநடப்புகள், ஏகாதிபத்தியத்தின் தான் தோன்றித்தமை: பல தேசிய கம்பனிகளின் ஆதிக்கம், போன்ற பல்வேறு எதிர்வு கூறல்கள் அதில் துல்லியமாக முன்வைக்கப்பட்டிருக்கினறன. முதலாளித்துவம் உலகளாவிய ரீதியில் வியாபித்திருப்பதற்கு விழையும். ஆகையால் தொழிலாளி வர்க்கம் சர்வதேச ரீதியில் சிந்திக்க வேண்டும், ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என மார்க்ஸ் கருதியிருந்ததை பொதுவுடமை அறிக்கை கருப்பொருளாகக் கொண்டுள் ளது. இன்றைய ஏகாதிபத்திய G.7அமைப்பின் கீழ் உலகமய மாக்கல் திட்டம் முன் வைக்கப்பட்டடிருப்பது, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்களின் ஆதிக்கத்தின் கீழ் அனைத்து உழைக்கும் மக்களையும் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்களையும் ஓரங்கட்டி துாசாக்குவதற்காகும். நிலைமையினை தன் மனக்கண் முன் நிறுத்தியே உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என தொழிலாளி வர்க்கத்திற்கு அறை கூவல் விடுத்திருந்தார். தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்பது போல் ஏகாதிபத்தியமே வினையை அறுவடை செய்யும் நிலைக்குத் தள்ளப்படலாம். ஏகாதிபத்தியத்தின் நிலைப்பாடு காரணமாக குறிப்பாக கிழக்காசியாவில் ஏற்பட்டிருக்கும் நிதி / பொருளாதார நெருக்கடியானது ஏகாதிபத்திய நாடுகளையுமே சூழ்ந்து கொள்ளாது என்பதற்கு உத்தரவாதமில்லை. தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு முதலாளித்துவத்துக்கு குழி பறிப்பதே அதன் வரலாற்றுக் கடமை அதற்காகவே அது உருவாக்கப்பட்டுள்ளது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். அறிக்கையிலுள்ள அடிப்படை அம்சங்களை அடுத்த இதழில் தருவோம்.

வ. திருநாவுக்கரசு

www.padippakam.com



# திருமலை: திட்டமிட்ட குடியேற்றம் எல்லாமே பாதுகாப்புக்காகத்தான்!



ஈழத் தமிழர் வரலாற்றில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் திருமலை, தமிழர் உரிமைப் போராட்டத்தில் தனித்துவமான இடத்தைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகராக விளங்கும் திருகோணமலையைச் சிங்கள மயமாக்குவதில் ஜனாதிபதி மட்டத்தில்இருந்தேதிட்டமிட்ட செயற்பாடு நடைப்பெற்று வருகிறது.

நாட்டின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் ஆட்சியாலத்தில் இருந்தே திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பித்த திட்டமிட்ட சிங்களக் குடியயேற்ற திட்டங்கள் இன்று வரை தொடர்கின்றன.

எங்கு அரச காணிகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் சிங்கள் மக்களைக் குடியமர்த்துவதில் அரச படைகளும், அரச அதிகாரிகளும், சிங்கள அரசியல் வாதிகளும், பிக்குமார்களும் என்றும்இல்லாதவாறு முனைப்புடன்நீண்ட காலத்திட்டமிடலுடன் செல்பட்டு வருகின்றனர்.

1953-ல் கந்தளாயில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையானதுஇன்றுகந்தளாயில்இருந்து சேருவில் வரையும், கண்டி வீதி இருமருங்கும்சீனன்குடா, ஆண்டாள்குளம் வரையும், அனுராதபுரத்திலிருந்து பதவி சிறிபுர கோமரன்கடவல, மொறவேவா, கன்னியா வரையும் உள்ள தமிழர் நிலம் முழுவதும்ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

திருகோணமலையில் எஞ்சியுள்ள தமிழர் நிலங்களில் கோயில் காணிகள், தனியார் காணிகள், சங்கங்களின் காணிகள் உதாரணமாக இரா. சம்பந்தன் எம்.பி.யின் லிங்க நகர் காணி, திரு கோணேஸ்வரம், சனீஸ்வரன், கிருஷ்ணன், வீரகத்தி, சின்னதொடு வாய் கோயில் காணிகள் முழுவதும் பெருந் தொகையான சிங்கள் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சின்னத்தொடுவாய் பிள்ளையார் கோயிலுக்குள் (திருகடலூர்) சிங்கள மீனவர்கள் மீன் வலை உலர்த்துகின்றனர். மடத்தடி வீரகத்திப்பிள்ளையார்கோயிலுக்குள்ளும், கிருஷ்ணன் கோயிலுக்குள்ளும் வெளியிலும் வைத்து ஓலை, தடிகள் கற்கள், மண் விற்பனை செய்யப்படுகிறது. கோயில் காணிகளில் நிரந்தரக் கட்டடங்கள் அமைத்து கடைகளாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அவ்வாறே கோணேசர் தீர்த்தக் கரையும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

இவ்வாறு அரச கா்ணிகளிலும், தமிழர் நிலங்களிலும் குடியமர்த்தப் படும் சிங்கள மக்களுக்குப் படையினரால் உடனடியாக பாதுகாப்புக்காக ஆயுதங்கள் வழங்கப்பட்டு, ஊர்காவல் படை சம்பளமும் வழங்கப்படுகிறது. அத்துடன்நீா்விநியோகம்போக்கு வரத்து என்பனவும் படையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கம் அதிப்ராய் மீளக் குடியமர்வு நிவாரணம், வீடு கட்ட கட்டட் பொருட்கள், கூரைத்தகடுகள் வழங்கப்படுகின்றன. பிக்குமாரும், அரச சார்பற்ற நிறுவனங்களும்ஏனைய பொதுத் தேவைகளைக் கவனித்துக்கொள்கின்றனர். இவ்வாறு திருகோணணமலை நகரின் பெரும் பகுதியும் அக்கிரமிக்கப் பட்டுவிட்டது.

இன்று திருகோணமலையில்பிரதான வீதிகள் இருமருங்கிலும் கரையோரப் பகுதிகளிலும் பெரும்பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. இதற்குப் படையினர் கூறும் காரணம் தங்களின் பாதுகாப்புக்காகவே சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்பதேயாகும். அவசரகாலச்சட்டத்தின் கீழ்பாதுகாப்புக் காரணங்களுக்காகவேகுடியேற்றுவதால் இக்குடியேற்றம் சம்பந்தமாக யாரும் எதுவும் செய்ய முடியாது என்று ஜனாதிபதியே கூறியுள்ளாராம்எனத்தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் திருகோணமலையில் அண்மைக் காலத்தில் பன்குளம், கன்னியா பகுதிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் இன்னும் மீளக் குடியமர்த்தப்படாமல் இருக்க சிங்கள் குடும்பங்களால் அப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே கடந்த வருடம் 17.10.1997ல் லிங்க நகரில் இராணுவ முகாம் ஒன்றை அமைத்து அங்கிருந்த 150 தமிழக் குடிமக்களையும் வெளியே றுமாறு படையினர் உத்தரவிட்டனர். அதனை எதிர்த்து தமிழ் மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர் எனினும் பயனளிக்கவில்லைலை. உடன் 40 குடும்பங்கள் பலாத்காரமாக அப்புரப்படுத்தப்பட்டன. இராணுவ வெளி அமைத்தவிட்டு மிகுதி மக்கள் மீது விதித்த தடையரண் அமைத்து வீடுகளுக்குரிய ஓலை, கல், தடிகள், சிமெந்து, கல், தகரங்கள், மின்சாரம், குடிநீர் பெற முடியாதவாறு தடை விதித்து வாகனங்கள் மோட்டர் சைக்கிள் கூட-கொண்டு செல்லமுடியாதவாறுதடை செய்யப்பட்டுள்ளது. யாவரும் அறிந்த விடயம்.

அது மட்டுமல்லாமல் வெளியேற்றப்பட்ட 40 குடும்பங்களுக்கும்இது வரை எந்த நிவாரண உதவிகளும் வழங்கப் படவில்லை. அத்துடன் அரச காணியில் அத்துமீறி குடியேறியோர் என்று இம்மக்கள் மீது அரசாங்க அதிபரினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவைஇவ்வாறிருக்க கடந்த இரண்டு வருடகாலமாக இம்மக்களின் வீடுகளுக்கு ஓலைக் கொண்டு போவது தடை செய்யப்பட்டதால், வீடுகளை வேயமுடியவில்லை. இதனால் இம்மக்கள் வீடுகளில் இருக்க முடியாது வெளியேறுவதைத் தவிர வேறு வழியின்றி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு படையினர் கூறும் காரணம் தங்களின் பாதுகாபபுக்காகவே இவைகளை வெளியேற்றுகின்றோம் என்பதேயாகும். இவ்வாறே பாதுகாப்புக்காகவே உப்பாறு மக்களுக்கு கடந்த 18.3.1998 -ல் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் வீடுகளும் உறுதிக் காணிகளும் கோயில் நிலங்களிலும் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எந்த பாதுகாப்புக் காரணமும், சமாதானமும் தடையாக இருந்தனவோ அதே காரணங்கள் தான் தமிழ் மக்கள் மீது அவர்களின் அடிப்படை உரிமைகள் மீதே தடை விதிப்பதற்கும் காரணம் உள்ளன.

திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிமாவட்டங்களில் இருந்து திருமலைக்கு கொண்டு வந்து குடியேற்றுவதும்தொடருமானால் இன்னும், ஒரு பந்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழில் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்.

இவ்வாறே திருகோணமலை மின்சார நிலைய வீதியில் புதிய பொதுச் சந்தை ஒன்று நகர சபையால் கட்டப்பட்டது. அது முற்றிலும் தமிழர் வாழும் சூழலில் அமைந்துள்ளது. ஏற்கனவே திருமலையில் மீன்பிடி வியாபாரம், சந்தை, போக்குவரத்து ஆகிய துறைகள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் பூரணக் கட்டுப்பாட்டுக்குள் போய் விட்டது. தமிழர் மீன் வியாபார, மரக்கறி வியாபாரம் செய்ய முடியாது. தனியார் போக்கு வரத்து சேவையில் இணைய முடியாது ஆகவேதற்போதுபுதிய சந்தையை திறந்து தமிழர் வியாபாரம் செய்ய முடியாது. புதிய சந்தை திறந்தால் பாதுகாப்புக்கும், சமாதானத்துக்கும் பங்கம் விளையும் என்பதே படையினர் விதித்த தடைக் கூறிய காரணம் ஆகும் லிங்க நகர் மாதிரி பாதுகாப்புக்காரணமும், சமாதானமும் கருதிச் சந்தையும் படைமுகமாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு திருகோணமலையில் 5 தமிழ்க் கட்சிகள் அலுவலகங்களை அமைத்து தமிழர் உரிமைகளுக்காக போராடி வருகின்றன என்பது வேடிக்கையான விடயம். அ மட்டுமின்றி பாராளுமன்றத்தில் அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவளித்து கொண்டு அரசின் ஆக்கிரமிப் யுத்தத்திற்கும் அந்த யுத்தத்துக் நிதிதிரட்டும் வெளிநாட்டுப் பிரச்சா நடவடிக்கைகளுக்கும் நேரடியாக ஆதரவளிக்கின்றனர். இவர் கை வரலாற்றில் எவ்வாறு தமிழ் மக்களா மறக்கவும், மன்னிக்கவும் முடியும்?

தமிழ் மக்களின் அடிப்படை உரி விடயங்களில் கூட தமிழ் கட்சிகளிட ஒற்றுமை இல்லை. ஒருவருக்கு ஒரு அள்ளி வைப்பதும், நான்முந்தி நீமுந்தி எ அரசை ஆதரிப்பதும், பத்திரி அறிக்கை விடுவதும் இவர்களின்கைவந் கலை. வயிற்றுபிழைப்புக்கு வழியில்லை யெனில், அகதிமுகாமில்தங்கியிருந்தத தமிழ் மக்களுக்குப் பேருவிதவியா இருக்குமல்லவா?

தமிழ் மக்களிடம் தமிழ்க் கட்சிக பற்றி அபிப்பிராயம் கேட்டபோது 90% மா மக்கள் தமிழ்க் கட்சிகள் மீ ஆத்திரமடைந்துள்ளனர். திருமலையி ஒரு தமிழ் நபரிடம் கேட்டதற்கு, தமி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபட்டு திருமலையின் இன்றைய பிரதா மண்ணோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை ளான லிங்கநகர் ஆக்கிரமிப்பு, சந் திறப்புத்தடை, உப்பாறு வெளியேற் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்க மூதூர் பொருளாதாரத்தை ஆகியவற்றில் எதிர்ப்புக் காட்டி அரசுக் நெருக்கடியைக் கொடுத்து ஜனநாய ரீதியிலும் போராட முடியும். ஆனா எந்தக் கட்சியும் தயாராக இல்லை உண்ணாவிரதத்தையும் இவர்க கேலிக் கூத்தாக்கிவிட்டார்கள் என தமிழ் மக்களின் பிரதிநிதிகை எண்ணிக் கவலைப்பட்டார் அவர்.

நன்றி: சரிநிக

அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களால் பறிக்கப்பட்டு வரும் தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளில் திருமலை மாவட்டத்தில் மட்டும் எத்தனை குடியேற்றங்கள் என்று பாருங்கள். 1998 வரையான குடியேற்றங்கள் இவை. இன்னும் புதிதாக பல குடியேற்றங்கள் முளைத்து வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. சிறிமாபுர | 31. கல்லாறு | 61. நிலவுக்கடாவெவ |
| 2. அபயபுர | 32. அலிஒலுவ | 62 ஒட்ச்சாக்குளம் |
| 3. மிகிந்தபர | 33. சரசுரா | 63. மண்மதவாச்சி |
| 4. 4-ம் கட்டை | 34. 1ம், 2ம், கொலனி | 64. சிங்கபுர |
| 5. ஆண்டான்குளம் | 35. சிறிபுர | 65. பொக்கியாட் |
| 6. வெல்பம்காரை | 36 மட்கோ | 66. புல்பத் |
| 7. 10- கட்டை | 37 சேருவில | 67. நாச்சிக்குடா |
| 8. மொறகிவன | 38 கந்தளாய் | 68. 5ம் கட்டை |
| 9. மயில்வேவ | 39.13ம் கட்டை | 69. 3ம் கட்டை |
| 10. நாமல்வத்த | 40 பன்குளம் | 70. மொரவெவ |
| 11. நானலை | 41. செவலபேக் | 71. சுமித்திராவகம |
| 12. கிளப்பன்பேக் | 42. மண்டலபுர | 72. மகாவல்கம |
| 13. நாலந்த | 43. சுமதிபுருஷ | 73. அல்லை |
| 14. கமல்தல்சுபுர | 44. சோமபுர | 74. கொட்டுவ |
| 15. குறிஞ்சங்குளம் | 45. எல்.1, பி1.2 | 75. கல்கட்டுவெல |
| 16. கொறவப் பொத்தான | 46.கல்மேபுயால | 76. கொம்புக்கட்டுவ |
| 17. 6-ம் கட்டை | 47. சாலியபுர | 77. கல்கனி வெவ |
| 18. 20-ம் கட்டை | 48. அக்கோபுர | 78. மொராமை |
| 19. கமல்தபுர | 49. கித்துலுத் | 79. பொத்தலாவெவ |
| 20. பலஸ்திபுர | 50 அலுத்ஓயா. | 80.குழுக்காவெல |
| 21. கோவில்வத்த | 51. ஒலிகண்டி | 81. மிசஸ்வெவ |
| 22. பரியூற்று | 52. அடம்பன் | 82. றொட்டுவெவ |
| 23. கோவில்கடவல | 53. கல்லறவு | 83. ஆனைக்கட்டி |
| 24. 97 - 98ம் கட்டை | 54. கிம்புல்பிட்டிய | 84. கருந்தாகன |
| 25. சீனியாலை | 55. மகாதிவுல் வெல | 85. பெக்கிலிக்கடாவெவ |
| 26.ஜெயந்திபுர | 56. வேப்பங்குளம் | 86. தெல்லியா |
| 27. ஜயபுர | 57. மல்கிபிரிப் | 87. சமந்தாபுர |
| 28. தெகிவத்தை | 58. 98ம் கட்டை | 88 பராக்கிரமபாகு புர |
| 29. நிலாப்பனை | 59. லங்கிரிகடவைப்பு | 89. கிரிச்சாண்டுகயாலிகள |
| 30. அரிப்பு | 60. கோமரங்கலேவ | 90. 97, 92, 93ம் கட்டை |

'திருகோணமலையில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களின் சொந்தப் பூமியில் இருந்து வெளியேற்றுவதும், சிங்கள மக்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளி மாவட்டங்களிலிருந்து திருமலைக்குக் கொண்டுவந்து குடியேற்றுவதும் தொடருமானால், இன்னும் ஒரு பத்து வருடத்தில் திருகோணமலை தமிழ் மண், தமிழர் தலைநகர், தாயகம் என்ற கதைக்கே இடமில்லாமல் போய்விடும்'

படிப்பகம்

www.padippakam.com



# ஈ.வெ.ரா பெரியாரும் ஆரிய பிராமணியமும்





**ஈ.வெ.ரா. பெரியாரின் பிறந்ததின நினைவையொட்டி கொழும்பு-கொம்பனிவீதி, கிச்சிலான் மண்டபத்தில் இலங்கைத் திராவிடக்கழக பொதுச் செயலாளர் இ.அருமைதாசனால் வெளியிடப்பட்ட நுல்வெளியீட்டு விழாவில் கலாநிதி விக்கிரமபாகு ஆற்றிய பிரதம விருந்தினர் உரை இது.**

பெரியாரின் சிந்தனைகள், ந்திய பாரம்பரியம் வரலாற்றில் ட்ட தவறுகளை திருத்துவதாக மைகின்றன.

முதலாவதாக, சாதிப் குபாடுகளை தொடர்ந்து நிலை லை நிறுத்தி வந்த ஆரிய ராமணியத்தை தோற்கடிப்பதே வரின் பிரதான இலக்காக ருந்துள்ளது. மதங்களால் ாதிக்கப்பட்ட பரமாத்மா என்ற ாதனையை மிகக் கடுமையாக ரியார் விமர்சித்தார். "மதங்களை ருவாக்கியவர்களின் நோக்கம் ாம் மற்றவர்களை விட லானவர் என்பதை நிலை றுத்துவதே" என்பது பெரியாரின் ருத்தாகும். சுற்றுப்புறச் சூழலை ாதுக்காப்பதே பெரியாரின் லட்சியத்தின் பிரதான பங்காக ருந்துள்ளது. அதே வேளை பண்களின் உரிமைக்காகவும், ந்திய சமூகத்தில் பெண்களுக்கு ழைக்கப்படும் அநீதிகளை வளியே கொண்டுவருவதற்கா வும் மிகக் கடுமையாக ழைத்துள்ளார். புரட்சி என்பதை பரியார் திராவிடர் ஆரிய ராமணியத்துக்கு எதிராகவும் ழக வாதிகள் உயிரின அழிவுக்கு திராகவும், பெண்கள் ஆண் லாதிக்கத்திற்கு எதிராகவும் ரண்டப்படுவோர் சுரண்டுவோருக்கு திராகவும் நடத்த வேண்டிய பாராட்டமாக வர்ணித்துள்ளார். நுக்கமாக கூறுவதானால் பெரியார் ழு மனித இன விடுதலைக்காக பாராடியுள்ளர்.

நாம் பெரியாரைப் பற்றி அறிய வண்டுமானால் இந்திய ரலாற்றை சற்று திரும்பி பார்க்க வண்டும். இதற்குரிய முக்கிய ாரணம் பொரியார் மிக நிண்ட ாலமாக நிலவி வந்த மனித டிமைத்தனத்துக்கு எதிரான ராக இருந்துள்ளார். இந்திய ாகரீகம் வீழ்ச்சியடைவதற்கு ன்பு, இந்தியா எங்கும் மிகச் சிறந்த ராவிட நாகரீகம் இருந்துள்ளது. மாகஞ்சதாரோ, கரப்பா ஆகிய கரங்கள் இன்றும் இதற்கு ாட்சியாக உள்ளன.

உலகின் திராவிட நாகரீகத்தில் ட்டுமே, ஆயதங்களுக்கோ பார்கருவிகளுக்கோ, நாட்டின் சல்வத்தில் சிறு தொகையாவது ரையமாக்கப்படவில்லை. சுதேச க்கள் மதிப்பளித்து வந்த கஜன் ாதா எனப்படும் தாய் கடவுள் ழிபாட்டு முறை ஆரிய மேலாதிக் த்தினால் முடிவுக்கு கொண்டு ரப்பட்டது. பதிலாக, ஆண்களின் ன்மையை உயர்த்தும் போக்கு டுமையாக கடைப் பிடிக்கப் ட்டதுடன் ஆண்களே சமூதாய தை சிருஷ்டிப்பவர்களாகவும், டவுளும் ஆணாக மாற்றப்பட்டது. ஆண் மேலாதிக்க சமூகம் ருவாக்கப்பட்டதுடன் பெண்கள் ஆண்களின் தயவில் வாழ்பவர் ளாக்கப்பட்டனர்.

ஆரிய பிராமணிய சமுதாயத்தில் ாதி முறை கடவுளின் பெயரால் யாயப்படுத்தப்பட்டது. இதனால் ன்பு நிலவிய பெண் தெய்வ ழிபாடும், பூமாதேவி பெண்ணே ன்ற நிலையும் நீடிக்கவில்லை. த்துடன் கடவுளே எல்லா டயத்தக்கும் நடு நாயமாகவும், ருக்கும் நிலை ஆரிய பிராமணிய ாதி சமூத்தில் இருந்தது. ஆரியரின் ரதான இலக்கியமான மகாபா தமும், இராமாயணமும், ஆரியர்களின் அதிகாரம் நிலை நிறுத்தப் படுவதை கூறுபவையாக உள்ளன.

கி.மு 500ம் நூற்றாண்டு அளவிலே ஆரிய பிராமணிய த்துக்கு எதிரான முதலாவது போராட்டம் தொடங்கியுள்ளது. புத்தர் எனப்படும் ஆரிய சமூகத்தின் ஆழும் உயர் குடி சமூகத்தை சேர்ந்தவர் ஆரிய சமூகத்தின் சாதி பிரிவு முறையை மட்டும் எதிர்க்க வில்லை சாதி முறையை நியாயப்படுத்தும் மதத்தத்து வங்களையும் நிராகரித்தார்.

மகதத்தில் உள்ள பிம்பிராசா எனப்படும் ராச்சியம், திராவிடர் மேலாதிக்கம் உள்ள பகுதியாக இருந்தது. இங்கே புத்தர் உட்பட பல புரட்சீகர சிந்தனையாளர்கள் இருந்தனர். திராவிட ஆண்களும், பெண்களும் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய மொழியான மகத பிராக்குருத்த மொழியையே பேச்சு மொழியாக புத்தர் பயன்படு த்தினார். இசிப்பத்தான என்ற இடத்திலேயே புத்தர் தனது கன்னிப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். இங்கே திராவிட தளபதியான சதாகிர ஒருகரையில் இருந்து புத்தரின் போதினையை செவி மடுத்ததாக கூறப்படுகிறது. திராவிட தளபதி களான ஹேம வற்றவுக்கும் சதாகிரவுக்கும் இடையே இடம் பெற்ற முதல் போதனை சம்பந்தமான உரையாடலை காளி என்னும் திராவிட பெண் ஒட்டுக் கேட்ட தாகவும் கூறப்படுகிறது. இவளே பௌத்தம் வலியுறுத்தும் ஜதார்த்தம் பற்றி விளங்கிக் கொண்ட முதல் பெண்ணாகிறாள். அசோக மன்னன் புத்தரின் போதனைகளை உலகம் முழுவதற்கும் பரவுவதற்கு காரணமாக இருந்தான், ஆரிய பிராமணிய மேலாதிக்க வாதிகள் தமக்கு எதிரானவர்களுடன் தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருந்தனர். அசோக மன்னனின் வீழ்ச்சிக்கு பின் இந்திய முழுவதும் ஆயிரக் கணக்கான வருடங்க ளாக ஆரிய பிராமணியத்தின் கீழ் வந்தது. இதன் பின்பு திராவிடர்களின் குரல் வட இந்தியா முழுவதும் இல்லாது ஒழிக்கப்பட்டது. தென் இந்தியா வில் கூட ஆரிய பிராமணியத்தின் சமயக் கொள்கைகள் (ஆத்மவாதம்) மூலம் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். மேற் கூறப்பட்ட வரலாற்றின் தன்மையும் புத்தரின் போதனைகளும், மேற்கத்திய நாடுகளின் யதார்த்த போக்குமே ஒரு இராட்சத போராளியாக பெரியாரை பிரசவித்தது. பெரியார் பிரச்சனைகளை வரலாற்றின் உதவியுடன் தீர்க்க விரும்பினார். " நாங்கள் திராவிட இராச்சியத்தை மீண்டும் கொண்டு வருவோம் அது தாய்வழிவந்த அமைதியான, யதார்த்தமான, பசுமையான, ஆட்சி முறையாக இருக்கும். திராவிடக் கழகம் பழக்க தோசங் கொண்ட சமய சடங்களால் வளர்க்கப்பட்ட ஆரிய பிராமணியத்தால் ஆண் மேலாதிக்கத்தால் விரோத போக்கால், சுரண்டலால், மற்றும் அறியாமையால் ஒடுக்கப் பட்டவர்களின் அமைப்பாகும். ஈ.வெ.ரா பெரியார் மகாத்மா காந்தியை விட ஒரு படி மேலானவர் என்றே கூற வேண்டும். ஏனெனில் பெரியார் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக மட்டுமல்லாது இந்தியாவில் ஆயிரமாயிரம் வருடங்களாக நிலவிய ஆண் மேலாதிக்கத் துக்கும், ஆரிய பிராமணியத்துக்கு எதிராகப் போராடினர்.

இன்று இலங்கையில் பொரியாரின் சிந்தனை முன்பைவிட பெரியளவில் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கே ஒரு அதிசயமே நடை பெறுகிறது என்றே கூற வேண்டும். அதாவது புத்தரின் போதினங்களை பின்பற்றுகின்றோம் என்று கூறுபவர்கள் இரத்த வெறியுடன் இன படு கொலை யுத்தத்தை தமிழ் மக்களுக்கு எதிராக புரிகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் விளக்கம் இந்த யுத்தமானது ஆரிய சிங்களவரால் திராவிட தமிழர்களுக்கு எதிராக புரியப்படும் யுத்தம் ஆகும் என்பதே.

வணக்கத்துக்குரிய மாதுளவே சோபிததேரோவும், ஏனையவர்களும், நவீன ஆரிய பிராமணர்களாக காட்சி தருகின்றனர். இவாகள் இராமரின் போர்வீரர்களாக இராமாயணத்தையே நவீன கருத்தாக மாற்றி எழுத முயல்கின்றனர். நாங்கள் பொரியாரின் போதனைகளுக்காக போராட வேண்டும். நாடோடி ஆரியர்கள் இந்தியாவை ஆக்கிரமித்த காட்டுமிராண்டித்தனமான யுகத்திற்கு வரலாற்றினை இட்டு செல்வதற்கு எடுக்கும் பைத்தியக்கார பிரயத்தனங்கள் முறியடிக்கப்பட வேண்டும் என்று பெரியார் கூறுகிறார். திராவிட என்பது ஒரு குறிப்பிட்ட இனத்துக்கான அல்லது கலை கலாச்சாரத்துக்கான அமைப்பு அல்ல, அது ஒரு சமூக நற்பண்புக்கான அடையாளமாகும். அது அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிரான அடக்கப் படுவோரால் நடத்தப்படும் போராட்டமாகும். ஆனால் இன்று இவ் அமைப்பின் கொள்கைகளுக்காக நிற்பவர்கள் அதற்கு எதிராகவே செயற்படுகிறார்கள். இன்று இந்தியாவில் பெரியாரின் கொள்கையை பின்பற்றுவோரில் சிலர் (மதவெறி கொண்ட) சில சேனையுடனும், பாரதிய ஜனதா கட்சியுடனும் பகைகோர்த்துள்ளனர். நாங்கள் பெரியாரின் போதனைகளை தமிழ் மொழியில், மட்டுமல்லாது ஏனைய மொழிகளிலும் சுதந்திரத்துக்காக போராடுபவர்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும். கடைசி ஆங்கில மொழியில் என்றாலும், புத்தரின் புத்திரர்களாக ஆனால் பிரம புத்திரர்கள் செய்றபடுபவர்களுக்கும் அனுப்ப வேண்டும். பெரியாருக்கு நாம் அஞ்சலி செலுத்த வேண்டுமானால், அவர் எதற்காக போராடினாரோ அதற்காக நாம் போர்ராட வேண்டும்.

பெரியாரின் கொள்ளைகளுக்கும் சோலிசத்துக்கும் அதிக வேறுபாடு இருப்பதாக தெரியவில்லை. பெரியாருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என ஒருவர் விரும்பினால், எங்களது போராட்டங்களுடனும் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் போராட முன்வர வேண்டும்.

உரையின் தமிழாக்கம்

**என்.ஜனகன்**

www.padippakam.com



# மலையகம் வடக்கு–கிழக்கு போல் மாறுமேயானால் நாடு தாங்காது

–சந்திரிகா–





மலையகத்தில் தற்போது பதட்ட நிலை உருவாகி உள்ளது. சென்ற மாதம் இரத்தினபுரி பகுதியில் உள்ள வெவல்வத்தையில் ஒரு சிங்கள காடையர் கொல்லப்பட்டமைக்காக, தோட்டத் தொழிலாளர் வாழ்ந்த பகுதியே சுடு காடாகியது. இதை செய்தவர்கள் பொது ஜன முன்னணியில் அங்கம் வகிக்கும் அமைச்சரும் முக்கிய இடது சாரி பிரமுகர் ஒருவர் என்றும் பேசப் படுகின்றது, இதே போன்றே பசறைப் பகுதியிலும் தோட்டத் தொழிலாளர்கள் தமது நீதியான கோரிக்கைகளுக்காக போராடும் போது அப் போராட்டத்தை திசை திருப்புவதற்காக, பல வேறு தொழிலாள விரோத நடவடிக் கைகள், எடுக்கப்படுடுள்ளன்.

அண்மைக் காலமாக தோட்டப் பகுதிகளில் அரச அடக்கு முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. அடையாள அட்டை இல்லாத காரணத்தினால், தோட்ட பகுதிக்குள்ளேயும், வெளியேயும், பல மலையக இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மலையக மக்களுக்கு அடையாள அட்டை வழங்குகின்றோம், என்று அரசாங்கம் அடிக்கடி கூறிவந் தாலும், மலையக இளைஞர்கள் அடையாள அட்டையை பெற முடியாதவர்களாக உள்ளனர். அமைச்சர் தொண்டமான், சந்திர சேகரன் போன்றோரின் கையா லாகாதத் தனமான நடவடிக்கை களால் மலையகமே கொதித்துப் போய் உள்ளது. இந்த நாட்டின் நன்மைக்காக மாடாய்' உழைத்து ஓடாய் போய் இருக்கும், மலையக மக்களின் வாழ்க்கையில் வசந்தம் வருவதற்கு தயங்குகின்றது. இன்னமும் புயல் காற்றே மலையகம் எங்கும் அடிக்கின்றது.

அமைச்சர் தொண்டமான் பெரும் விருட்சமாக வளர்ந்துள் ளார். இதனால் மலையக மக்க ளுக்கு என்ன பயன் கிடைத்து ள்ளது. அண்மையில் அமைச்சர் தொண்டமான் தனது பிறந்ததின கொண்டாட்டத்தை 5 நட்சத்திர ஹொட்டல் ஒன்றில் கொண்டா டினார். இது மலையக மக்களுக்கு பெருமை தருமா?

மலையக தோட்டங்களை தனியாருக்கு வழுங்குவதில் அரசு தீவிரமாக உள்ளது. இதனால் லயன்களில் வாழும் உரிமை கூட மலையக மக்களுக்கு மறுக்கப் படும் நிலை உருவாகின்றது. ஏற்கனவே சிறு தோட்ட வடிவில் தேயிலை உற்பத்தி தொடங்கப் பட்டதால் மலையக மக்கள், பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இன்று அரசில் உள்ளோர் இனவாதமாக பேசும் நடவடிக்கை அதிகரித்தே வருகின்றது. ஜனாதிபதி அவர்களே தென்னாபிரிக்காவில் தமிழ் மக்களை வந்தேறு குடிகள் என வர்ணித்துள்ளார்.

நாட்டின் ஏப்பாகத்தில் அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினாலும் தண்டனை மலையக மக்களுக்கும் சேர்ந்தே வழங்கப்படுகின்றன. 1977 ம, 1979 ம், 1981 ம், 1983 ம், ஆண்டுகளில் மலையகம் எங்கும் இனக்கலவரங்கள் நடந்துள்ளன. இன்று உலகில் மக்களுக்கு உரிய சிவில் உரிமைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. ஆனால் மலையக மக்களின் உரிமைகள் யாவும் தேய்ந்தே வருகின்றன. அரசாங்கம் வடக்கு கிழக்கைப் போன்று மலையகத்தையுமே உருவாக்குவதற்கு பகீரத பிராயத்தனம் செய்கின்றது. எனவே சமூக ரீதியாக பொருளாதார ரீதியாக தொடர்ச்சியாக பாதிக்கப் பட்டு வரும் மக்கள் கூட்டம் கிளர் ந்தெழாமல் இருக்கமுடியாது. அத்தகைய நிலையே இன்று மலையகத்தில் காணப்படுகி ன்றது. இத்தகைய சூழ் நிலையில் இலங்கையரசு யுத்தத்திற்'காக ஆயுதங்களை மாத்திரமல்ல ஆட்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகுவதைத் தடுக்க முடியாது.

— ஐ.ஏ.சிவானந்தம்

## இவர்களும் பௌத்தர்களா?

அண்மையில் அக்கரபத்தனைக்கு செல்லும் பஸ்ஸில் நான்கு பௌத்த குருமார்கள் ஏறி இருக்கின்றனர். இவர்களில் இருவருக்கு உடனடியாக அவர்களுக்குரிய ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவது குருவுக்கு பயணி ஒருவர் எழுந்து ஆசனத்தை வழங்கியுள்ளார். நான்காவது குருவுக்கு ஆசனம் கிடைக்கவில்லை. நான்காவது பௌத்த குருவுக்கும் ஆசனம் வழங்க வேண்டும் என்று ஏனைய பௌத்த குருமார் அடம் பிடித்துள்ளனர். பிராயணிகளோ நாங்கள் பல மணி நேரம் வரிசையில் காத்து நின்று கிடைத்த ஆசனம், இன்னமும், பல மணி நேரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது, என மறுத்துள்ளனர். சாரதி பஸ்ஸை நவகமுவ பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

பொலிசாரிடம் பௌத்த குருமார் முதலில் ஓடிச் சென்று முறையிட்டு உள்ளனர். மனம் இரங்கிய பொலிசார் பல நிமிட நேரம் பிரயாணிகளுடன் போராடி குருமாருக்கு ஆசனத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

## தொழிற் சங்க வாதிகளுக்கு மிரட்டல்!

பனாவத்தை, கல்பானை, களனி போன்ற பகுதி தோட்ட தொழிலாளர்கள் நவ சமசமாஜ கட்சியின் தொழிற் சங்கத்தில் மேல் கீழ் மலை நாட்டு தோட்ட தொழிலாளர் சங்கம் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் புதிதாக சேருகின்றார்கள். இது வரை காலமும் இருந்த தொழிற்சங்கங்களில் ஏற்பட்ட வெறுப்பின் காரணத்தால் இப்புதிய அமைப்பின் மேல் விசுவாசம் கொண்டு சேர்ந்து வருகின்றார்கள்.

ஆகவே தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு பல கெடுபிடிகளை கொடுத்து வருகின்றது. முழு நாள் வேலைக்கு அரை நாள் வேலையும், கொழுந்து பறிக்கும் திறமை உள்ளவர்களுக்கு பதிலாக அனுபவமற்றவர்களையும், சுகவீன சலுகையில் உள்ளவர்களுக்கு தண்டனை கொடுக்கும் முகமாகவே வேலை பகிர்ந்து கொடுப்பதிலும் தொழிலாளரை போட்டு நசித்து புளிந்து எடுக்கின்றது.

நிர்வாகம் தொழிலாளர்களின் ஆதரவுடன் மலையக மக்களுடன் ஆதரவுடன் பதவிக்கு வந்த அரசுடன் பல தொழிந் சங்க வாத தலைவர்கள் மந்திரியாக இருந்தும் தேசிய மயமாக்கிய தோட்டங்களை தனியார் மயப்படுத்தலினால், கண்டும் காணாத மாதிரி தலைவர்கள் சாய்ந்தால் சாயிற பக்கம் சாயிற செம்மறி ஆடுகள் போல் இருப்பதால் தோட்ட தொழிலாளர்கள் துன்பப்படுகின் றார்கள்.

தொழிற் சங்கங்களை உண்டாக்கியவர்களே இன்று தொழிலாளர் அணிதிரளை தடுக்கின்றனர். ஏனெனில் தற்போது கறுப்பு வெள்ளையர்களாகி விட்டனர் நம் நாட்டு தலைவர்கள் -

சாது மிரண்டால் காடு பிளறும்.

எமது தொழிற்சங்கத்தில் சேர விரும்பும் தோட்டப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மேல் கீழ் மலை நாட்டு தோட்ட தொழிலாளர் சங்கம் எப்போதும் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

*இல. 17, பொக் லேன், கொழும்பு, உ. தொ.பே-430கூ, 324063*

## எட்டியாந்தோட்டை பனாவத்தை காணி பங்கீடு ஓர் நாடகம்!

தோட்ட தொழிலாளர் மேல் கருணை கொண்ட அரசு பல இடங்களில் சுவர்ண பூமி திட்டத்தில் காணி வழங்கி வருகின்றது ஆனால் எட்டியாந்தோட்டை பனாவத்தையில் தோட்ட தொழிலாளர்கள் 20 பேருக்கு 7 பேர்சஸ் வீதம் வீடு கட்ட பகிரப்பட்டுள்ளது.

இதில் 5 பேருக்கு 3 1/2 பேர்சஸ் வீதம் வழங்கப்பட்டது. இக்காணியானது நீர் வழிந்தோடும் வாய்க்காலுக்கு அருகாமையில் பிரதான வீதிக்கும் அருகில் கொடுக்கப்பட்டுள்ளது. 3 1/2அடி மட்டுமே இடை வெளியுள்ளது. வீதியிலிருந்து 20 அடி விடப்பட வேண்டியது சட்டம். ஆனால் இக்குறுகிய தூரத்தினால் பாதையில் போகும் வாகனத்தால் எந்த வேளையும் உயிருக்கு ஆபத்து விளைவிக்க கூடியதாக உள்ளது.

சில காலத்தின் பின்பு வீதி விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தில் காட்டப்படும் வீடுகளை உடைக்க வேண்டிய நிலையும் கொடுக்கப்பட்ட காணியின் பரப்பு அளவும் குறைந்து விடும். ஆகவே தோட்ட தொழிலாளருக்கு கொடுக்கப்பட்ட காணியில் இவர்கள் நிரந்தரமாக இருக்க முடியாத நிலை ஏற்படும் என அஞ்சப்படுகின்றது. இந்த வீடுகளுக்கு கொடுப்பதற்று 30 தகர சீட் பொது நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் 16 தகர சீட்டும், 2 மேற் கூரை தகரம் மட்டும் காணிக்காரருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

மிகுதியான 12 தகர சீட்களும் எந்த முதலை விழுங்கியதோ தெரியவில்லை. மற்றும் இந்த காணியில் ஒன்றரை அடி மண்ணை தோண்டினால் நீர் ஊற்று கிளம்புமாம். இப்படிப்பட்ட சதுப்பு நிலத்திலும், நுளம்புகள் பெருகும் நீர் வாய்க்கால் அருகில் இருப்பதாலும் சுகாதார கேடும், மற்றும் மழை காலத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் என குறை கூறுகின்றார்கள், பனா வத்தை காணி பெற்றுக் கொண்டவர்கள் இவர்களின்குறைகளை எட்டியாந்தோட்டை நவ சமசமாஜ கட்சி பிரமுகரான K. முத்தையா ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



# கதறும் தமிழர்கள்!



சின்னஞ் சிறிய அறை அது. அதனுள் நெருக்க நெருக்கமாய் நூற்றி இருபது பேர் குந்தியமர்ந்து டலைக் குறுக்கி தலையைக் குனிந்து, முழங்காலில் முகம் தைத்தபடி உட்கார்ந்திருந் தார்கள். தலை நிமிர்ந்தால் 'பாச்சு, அடி விழும். அவ்வாறு ங்களால் பத்து நிமிடத்திற்கு மேல் அமர முடியாது. வலி பின்னி யெடுக்கும். ஆனால் அந்த நூற்றி இருபது பேரும் ஆறு மாதமாய் அப்படித்தான் அமர்ந்திருக்கி றார்கள். அதில் 16 பேர் பெண்கள். அவர்கள் மிகவும் பலவீன டைந்திருந்தார்கள். ஒரு வேளை உணவால் உடலும், கற்பழிப்புக் கொடுமைகளால் மனமும் ரணமா கியிருந்தது. அதில் ஒருத்தி ..வசந்தா...இன்னமும் அழுது கொண்டிருந்தாள். தலையைத் தூக்கினால் அடி விழும். சத்தம் போட்டு அழுதாலும் அறை விழும்.

வசந்தா உள்ளுக்குள் உருகி உருகி அழுதாள். காரணம் சில தினங்களுக்கு முன்பு பிறந்த அவளது குழந்தை, அப்பன் பெயர் தெரியாத குழந்தை இறந்து விட்டது. நிறை மாத கர்ப்பி ணியாய் இருக்கும் போதும் இப்படி தந்த வைத்து அமர்ந்தால் அந் தக் குழந்தை எப்படிப் பிழைக்கும்? வாகாய் அமர்ந்திருந்தால், வயிற்றில் விழும் பூட்ஸ் கால் மிதியால் அது செத்திருக்கும். தந்தி அமர்ந்தால் இயற்கை பாகவே அதற்கு விடிவு கிடைத்தி நக்கிறது. வசந்தாவின் இன்றைய அழுகைக்கு பச்சைக் குழந்தை பின் மரணம் ஒரு காரணமாக இருந்தாலும், இன்னொரு காரண மும் இருந்தது. அது மார்பில் ஏற்பட்ட நெறிக்கட்டு. குழந்தை களுக்குப் பால் தர முடியாத நிலை, ஒரு தாய்க்கு ஏற்படுமா னால், அந்தப் பால் மார்பிலேயே தங்கி, இறுகி கனத்து வலி வாட்டியெடுக்கும். சுலபமாய் அந்தப் பாலை வெளியேற்றவும் முடியாது. கையை வைத்தாலே வேதனை ஊற்றெடுக்கும். அதற்குத் தகுந்த சிகிச்சை தர வேண்டும். மார்பகத்தில் வென்னீர் ஒத்தடம் தர வேண்டும். மெல்ல நீவிவிட வேண்டும். இதெல்லாம் செய்யாவிட்டால் எடைக்கற்க ளைக் கட்டி தொங்கவிட்ட மாதிரி இறுகிப் போய் இழுக்கும். வசந்தா விற்கும் அப்படிதான் செய்தது.

வலி பொறுக்க முடியாமல் அவள் அந்தக் காரியத்தைச் செய்தாள். அதாவது எழுந்து நின்றால். பலவீனமான குரலில் காவலுக்கு நின்றவர்களிடம் இறைஞ்சினாள். "அய்யா, எஜமாங் களே, குழந்தையும் செத்துடுச்சு. இப்ப என் மார்லையும் நெறி கட்டிடுச்சுய்யா. வலி தாங்க முடியல." மேலும் பேசக் கூட திராணியில்லாமல் கையெடுத்துக் கும்பிட்டாள் வசந்தா.

அறைக் கதவை ஒருவன் சாத்த, எல்லோருக்கும் முன்னால் இன்னொருவன், வசந்தாவை சுவரோடு சுவராய்ச் சாய்த்தி நிற்க வைத்தான். அவள் மார்புகளின் மீது கை வைத்து.... வசந்தா வலியில் உரகித் துடித்தாள். செத்துவிடலாம் போல் உணர்ந் தாள். அந்த மிருகத்தின் வெறிச் செயலால் கட்டிக் கிடந்த பால் ரத்தம் கலந்து பீய்ச்சியடித்தது.

மேற் கண்ட சம்பவம் 'மருத நாயகம் படத்தில் வரும் ஒரு காட்சி என்றோ, ஸ்ரீனிவாசலு எழுதும் கதையின் ஒரு பகுதி என்றோ, ஆங்கில நாவல் ஒன்றின் தமிழ் உல்டா என்றோ நீங்கள் நினைத்தால் அது முற்றிலும் தவறு. நெஞ்சை உருக்கும் அந்த நிகழ்ச்சி கர்நாடக பார்டலில் வாழும் ஒரு தமிழச்சிக்கு நடந்த சம்பவம். நிகழ்த்தியது அதிரடிப் படை போலீஸார்! இது ஒரு சாம்பிள் தான். இது போல் நினைத்து பார்க்க முடியாத நூற்றுக் கணக்கான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

### காரணம்?

சிறிய அறையில் சித்திரவதை செய்யப்படும் அனைவரும் சந்தன வீரப்பன் நடமாடும் பகுதியைச் சேர்ந்தவர்கள்! வீரப்பனைப் பிடிக்கத் துப்பில்லாத கர்நாடகக் காவல் படை அவனைப் பற்றி இவர்களிடம் ஏதாவது விஷயம் கிடைக்குமா? இந்த மக்கள் தான் அவனுக்கு உதவுகிறார்களா? என்று ஆராய தடா கைதிகளாக இவர்களை 'போலீஸ் கேம்ப்'பில் வைத்திருக்கிறது. இடம்: கர்நாடக காவலில் தமிழக பார்டரில் மாதேஸ்வரன் மலையில் இருக்கும் அதிரடிப் படை போலீஸ் கேம்ப்

1993 ல் கர் நாடகப் படையினரால் பிடிக்கப்பட்ட 121 பேரில் 76 பேர் மட்டும் ஜாமீனில் வந்திருக்கிறார்கள். மீதமுள்ள 45 பேரில் 12 பேர் பெண்கள். 12 ல் ஒருத்தி வசந்தா (பெயர் மாற்றப் பட்டுள்ளது) கைதிகளும் சரி, ஜாமீனில் வந்தவர்களும் சரி, 'போலீஸ் போலீஸ் கேம்ப்' என்ற வார்த்தையைக் கேட்டாலே நடுங்குகிறார்கள்.

### அதென்ன போலீஸ் கேம்ப்?

'சப் இன்ஸ்பெக்டர் வரச் சொன்னார்னு தகவல் தெரிஞ்சு போனேன். நேரே கேம்ப்புக்குக கூட்டிட்டுப் போயிட்டாங்க. கேம் பில் மூணு மாசம் இருந்தேன்ங்க. பதினைஞ்சுக்குப் பதினைஞ்சு அளவுள்ள கட்டிடம்... அதுக் குள்ளே நூற்றுக்கணக்கானவ ங்க... எல்லாரும் தலையைக் குனிஞ்சு உட்கார்ந்திருக்கணும். தலையை நிமிர்த்தக் கூடாது. கீழே சாய்ஞ்சு படுக்க முடியாது. திடீர் திடீர்னு சட்டை எல்லாத் தையும் கழட்டிட்டு மூங்கிலிலே தொங்க விட்டு அடிப்பாங்க பாருங்க.. எல்லா அவஸ்தைகளையும் கோர்டில் ஜர்ஜ் அய்யாக்கிட்டேச் சொல்லி அழுதேங்க..." சொல்லும் போதே குரல் அடைக்கிறது. அந்தப் பெரியவருக்கு.

நடுத்தர வயதுக்காரரான இன் னொருவர் சொல்ல ஆரம்பித்ததும் சில்லிட்டு உணர்ச்சி பரவின மாதிரி இருக்கிறது.

"அந்தக் கேம்பில் ஆறு மாசம் இருந்தேனுங்க.. ஒரே துணியைத் தான் ஆறுமாசம் கட்டியிருந்தேன். என் மேல் என்ன குற்றச்சாட்டு? எதுக்குக் கைது பண்ணினாங்க? தெரியலை. ஆறு மாசம் தலை யைக் குனிஞ்சுக்கிட்டு உட்கார்ந் திருக்கிறது எவ்வளவு கஷ்டம் ங்க...? பெண்களை எந்த நேரத் திலும் எது வேண்டுமானாலும் செய்வாங்க.அவங்க துணிகளை அவிழ்த்துட்டு கைகளை கட்டி அங்க மார்புல கீழ் உறுப்பிலே 'கிளிப்' மாட்டி கரண்ட கொடப்பா ங்க. சில சமயம் பெண்களுக்கு கிளிப் மாட்ட ஆண்களை அனுப்பு வாங்க. சில பெண்களுக்கு கீழ் உறுப்பில் கரண்ட் கொடுத்து உறுப்பே புண்ணும், ரத்தமுமா ஆகிப் போச்சு. ராத்திரி திடீர்னு வந்து பெண்களை எதிரில் இருக் கும் பாத்ரூமில் வைச்சு எல்லோரு க்கும் எதிரிலேயே கற்பழிப்பாங்க. அப்படி கேம்பிலேயே இரண்டு பெண்களுக்கு கருத்தரிச்சு 2 குழந்தைகளும் பிறந்துச்சு. தின மும் ஒரு வேளை மட்டும் களி சாப்பிடுறவங்களுக்கு என்ன ஜீவன் இருக்கும்? நரகத்தைப் பத்திப் பல பேர் பேசுவாங்க. நாங்க அதை அனுபவிச்சுருக்கோம்ங்க. 2 மாச மாகக் கண்ணைக் கட்டி வைச்சி ருந்தப்போ உலகமே தெரியாம, பக்கத்திலே இருக்கிறவங்க கூடப் பேச முடியாமல் அவ்வளவு அவஸ்தைப்பட்டாச்சுங்க... "கண்ணீருடன்" சொல்கிறார்.

தமிழ் நாட்டில் பன்னாரி, ஆசனூர், தட்டக்கரை, மேட்டுர் என்று சில இடங்களிலும், கர்நாட காவில் பொழிஞ்சூர், நாலுரோடு, மாதேஸ்வரன் மலை என்று கில பகுதிகளின் அதிரடிப் படையினரின் 'போலீஸ் கேம்ப்'கள் இருந்தன. வீரப்பன் இருக்கற பகுதியில் விறகு வெட்டப் போனவர்கள், மளிகைக் கடைக்காரர்கள், பார்பர்களைக் கூடப் பிடித்து கேம்பில் போட்டு விட்டார்கள். வீரப்பன் வந்து கும்பிட்டதற்காக மாதேஸ்வரன் மலைக் கோவில் பூசாரிகள் மூன்று பேர் இப்போது தடாவில் மைசூர் சிறையில் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலாவது சுப்ரீம் கோர்ட் ஆர்டரின்படி ஒரு குழு அமைத்து தடா கைதிகள் விடுதலை செய்யப்பட்டிரு க்கிறார்கள். ஆனால் கர்நாடகாவில் அப்படி எந்தக் குழுவும் அமைக்கப்படவில்லை. விசாரணையும் இல்லை. கேம்பக ளில் எத்தனைப்பேர் இறந்தார்கள், காணாமல் போனார்கள் என்கிற விபரங்கள் கூடக் கொடக்க முடியவில்லை" என்கிறார் தமிழ் நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் செயலாளரான வி.பி. குணசேகரன்.

கர்நாடகாவில் 120 தமிழர்க ளுக்கு நடந்திருக்கிற கொடுமை களை எதிர்த்து கர்நாடகாவில் உள்ள தமிழர்கள்' மட்டுமல்ல, அங்குள்ள பல அமைப்புகளும் குரல் கொடுத்திருப்பது ஆரோக்கி யமான விஷயம்.

"சுப்ரீம் கோர்ட் 'தடா' கைதி கள் குறித்து பரீசிலிக்க அதிரடிப் படையினரையும் முக்கியமாக விசாரிக்கச் சொல்ல வேண்டும். அவர்களது அட்டுழியங்கள் வெளியே தெரிய வேண்டும்"- ஆவேசமாகச் சொல்கிறார் கர்நா டக பெண்கள் கமிஷன் சேர்மனாக இருந்த பிரபாவதி.

"ஜெயிலில் இருக்கிற கைதி களை விசாரிக்க ஒரு கமிட்டியை அமைத்திருந்தார்கள், அந்தக் கமிட்டியில் இருந்த நானும் விசாரி க்கப் போன போது அங்கிருந்த பலருக்குத் தங்கள் என்ன குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கி றது என்பதே தெரியவில்லை. அவர்களுடைய பிரச்சனை குறித்து தெரிந்து நாங்கள் சில ஆலோசனைகளைச் சொல்லியிரு க்கிறோம், அதையெல்லாம் அரசு ஏனோ கண்டு கொள்ளவில்லை" என்கிறார் பெங்களூர் ஹைகோர்ட் வழக்கறிஞரான விஜயா.

'தடா' கைதிகளான இவர்கள் குறித்து பரிசீலிக்க ஒரு கமிட்டியை கர்நாடக அரசு அமைத்தாக வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரச்சனையை சுப்ரீம் கோர்டின் கவனத்துக்குக் கொண்டு போக இருக்கிறோம்" என்கிறார் பெங்க ளூர்மக்கள் சிவில் உரிமைக் கழகத் தலைவரான ஹஸன் மன்சூர்.

மாநாடு பிஸியில் இருக்கும் அரசியல் வாதிகள் மாடு மாதிரி நாதியில்லாமல் தவிக்கும் இந்த அப்பாவித் தமிழர்கள் பக்கம் எப்போது கவனம் செலுத்த போகிறார்கள்?

### கடைசிச் செய்தி

இத்தனை அவலங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் சங்கர் பிதாரி. அதிரடிப் படைத்தலைவர். நடக்கும் விஷயங்கள் அவருக்கு தெரியுமா,தெரியாதா என்பது தெரியவில்லை. அனால் அவரது 'சேவை' க்குப் பரிசாக கர்நாடக அரசு சமீபத்தில் அவருக்குப் பிரமோஷன் கொடுத்திருக்கிறது?

### கொழுந்தனுக்கு உதவி பண்ணினேனா?

வீரப்பனின் அண்ணன் மாதய் யனின் மனைவி மாரியம்மாளை கொள்ளேகால் அருகில் உள்ள ராமபுர கிராமத்தில் சந்தித்தோம்.

"என்னோட வீட்டுக்காரரை கோவை ஜெயிலில் வைச்சிரு க்காங்க. வீரப்பனை நாங்க பார்த் தப் பல வருஷங்கள் ஆச்சுங்க, ஆனாலும் கொழுந்தனுக்கு நான் உதவி பண்ணியிருப்பேன்னு என்னைக் கைது பண்ணி மூணு வருஷத்தக்கு மேல ஜெயிலில் வைச்சிருந்தாங்க. என் கூட இருந்த பெண்களைச் சித்திர வதை பண்ணினாங்க. 'ஷாக்' கொடுத்தாங்க. ஆன்ால் என்னை அடிக்கலை. 'தடா' சட்டத்தில் கைது பண்ணினதால் வெளியே வந்து மாதேஸ்வரன் மலையில் தங்கி வாரத்துக்கு ஒரு தடவை போலீஸ் ஸ்டேஷனில் கையெ ழுத்துப் போட்டுக்கிட்டிருக்கேன். எங்க குடும்பமே சிதறிப் போச்சு ங்க".

### கர்நாடகத்தில் புறக் கணிக்கப்பட்டோம்: தமிழ் நாட்டிலுமா?

'தடா' வில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்திருந்த பசுவ கவுடா, சோமன், கோவிந்தசாமி உள்ளி ட்ட பன்னிரெண்டு பேர்களைச் சந்தித்துப் பேசினோம்.

"சுப்ரீம் கோர்ட் தலையிட்டு 'தடா' கைதிகள், இறந்தவர்கள் பற்றிய விபரங்கள் கேட்ட போது கர் நாடக அரசு சரியான தகவல் கொடுக்கலை, நாங்கள் தமிழ் பேசுகிறவர்கள் என்பதால் கர்நாடகத்தில் புறக்கணிக்கப் பட்டோம்: தமிழ் நாட்டில் எங்கள் நிலையைப் பற்றி ஏன் யாரும் பேசலை?

—நன்றி—குமுதம்

படிப்பகம்

www.padippakam.com



புதிய
சமதர்மம்

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்பவற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியூ வீதி, கொழும்பு-02
தொலைபேசி : 430621 தொலைமடல் : 334822

## கல்லுளி மங்கன் போன வழி பாறைகள் எல்லாம் தவிடு பொடி!

பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) தலைமையிலான இந்திய அரசாங்கம் வெண்கல கடையில் நுழைந்த யானை போல் இந்தியாவை ஆட்சி செய்யப் பார்க்கிறது. மத சார்பின்மையை அத்திபாரமாகக் கொண்ட இந்திய அரசியலமைப்பு சட்டத்தையே தூக்கி வீசும் அளவுக்கு ஆட்சியாளர் செயற்பட முனைகின்றனர். அதாவது சமஸ்கிருத மொழியையும், இந்து மதத்தையும் கட்டாய பாடங்களாக இந்தியாவின் கல்வித்திட்டத்தில் புகுத்துவதற்கு பா.ஜ.க அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளது.

இது தொடர்பாக சென்ற வாரம் புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பலத்த எதிர்ப்புகளும் வெளிநடப்புகளும் இடம் பெற்றுள்ளன. அத்தனையடுத்து உத்தேச திட்டம் தற்காலிகமாகவோ என்னவோ கைவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. அந்த எதையும் ஒன்றிணைந்து தட்டிக் கேட்டால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தாம் எடுத்த காரியத்தை நியாயப்படுத்துவதற்காக இந்திய மனித வள அபிவிருத்தி அமைச்சர் முரளி மனோகர் ஜோசி, எதிர்ப்புகள் அர்த்தமற்றவை, தர்க்க ரீதியற்றவை, அரசியல் பின்னணி கொண்டவை என்றெல்லாம் பிதற்றியிருப்பதைக் காணக் கூடியதாயுள்ளது. விஷ்வ ஹிந்து பரிஷத்' (வி.ஹி.ப.) எனப்படும் உலக இந்துக்கள் சபையானது ஜோசி கூறியதற்கும் அப்பாற் சென்றுள்ளது. உத்தேசித்த திட்டத்தினை எதிர்ப்பவர்கள், இந்துக்களை தமது சொந்த நாட்டிலேயே மிக வன்மையாக அவமதிக்கிறார்கள். மிகப்பெரிய இனவாதத்தில் ஈடுபடுகிறார்கள் என்றெல்லாம் வி.ஹி.ப. தலைவர் அசோக் சிங்கல் கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் வி.ஹி.ப. தான் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரானது என்பதையும் இந்தியாவில் ஒரு இந்துத்துவ மத ஆட்சியினை உருவாக்குவதே வி.ஹி.ப.வின் நோக்கம் என்பதையும் அதன் தலைவர் சிங்கல் ஒழிவுமறைவின்றி கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது. வி.ஹி.ப., பாஜ.க.வுக்கு மிகவும் நெருக்கமானது என்பது உலகறிந்த விடயமாகும்.

பா.ஜ.க. அரசாங்கத்தின் மதவாதப் போக்கினை எதிர்ப்பதில் இந்திய காங்கிரஸ் தான் முன்னணியில் நிற்பதை காண முடிகிறது. சரிந்திருந்த தனது செல்வாக்கினை கட்டியெழுப்புவதற்கு காங்கிரஸ் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தலாம். சோனியா இதனை முறையாகப் பயன்படுத்தி தான் இந்தியாவின் மருமகள் மட்டுமல்ல தலைமகள் என்றும் நிரூபிக்க விழைவார்.

ஆனால் உண்மையில் மதவாதத்தை எதிர்த்து போராட வேண்டிய இடதுசாரிகள் வாழாவிருப்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. இது ஒரு துர்ப்பாக்கிய நிலைமை மட்டுமல்லாமல் இடதுசாரிகள் இழைக்கும் துரோகம் எனவும் கருதப்பட வேண்டும். இதன் எதிர்கால விளைவுகள் மிகவும் பாரதூரமானதாயிருக்கும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இந்தியாவின் பிரிவினை சக்திகள் கட்டுக்கடங்காமல் செயற்பட வாய்ப்புண்டு. இலங்கையில் இன மத ரீதியான சிங்கள பௌத்த பேரினவாதம் இந்த நாட்டிற்கு ஏற்படுத்தியுள்ள விபரீதங்களும், இரத்த ஆறுகளும் எங்கும் இனவாத மதவாத சக்திகளுக்கு ஒரு எச்சரிக்கையாகியிருத்தல் அவசியம்.

## வடக்கே குண்டு மழை தெற்கே அம்புலன்ஸ் ஓசை
## அம்புலன்ஸ் ஒலி 'தேசிய கீதம்' ஆகியுள்ளது!

இன்று தென் இலங்கையில் மக்கள் மனதில் எதிரொலிக்கும் ஓசை எது வென்றால் அது "அம்புலன்ஸ்" ஓசை என்றே கூறவேண்டும். கௌதம புத்த பகவான் இறந்த குழந்தையை உயிர்பித்துதர "சாவை அறியாத வீட்டில் இருந்த ஒரு பிடி அரிசி வாங்கி வா" என்று அன்று கூறினார். ஏனென்றால் மரணம் நடைபெறாத வீடு ஒன்று இருக்க முடியாது. அது போலவே இன்று இந்த நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்படாத ஒரு குடும்பம் இருக்க முடியாது. அரசின் பொருளாதாரக் கொள்கையில் தென் இலங்கை எங்கும் பஞ்சம் தாண்டவமாடுகிறது. பின்தங்கிய வறிய குடும்பங்களின் பிள்ளைகள் ஏழ்மையின் நிமித்தம் போர் முனைக்கு செல்கின்றார்கள். போரை மிருகத்தனமாக நடத்தும் உயர் குடி அரசியல் வாதிகளின் பிள்ளைகள் எவரும் போர் முனையில் இல்லை. போரின் உக்கிரத்தால் மரண ஓலம் இல்லாத நாளே தென் இலங்கையில் இல்லை எனலாம். "அம்புலன்ஸ்" ஓசை என்பது மனித காதுகளை செவிடாக்கியுள்ளது. இலங்கையின் தேசிய கீதமாக அம்புலன்ஸ் ஓசையை வைத்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனென்றால் அந்தளவுக்கு யுத்த வெறி அரச உயர் மட்டத்தில் வேர் விட்டுள்ளது.

கடந்த மாதம் 27ம், 28ம் தேதிகளில் கொழும்பு மாநகரப் பகுதியில் தொடர்ச்சியாக கேட்ட அம்புலன்ஸ் வண்டிகளின் ஓசை தென் இலங்கை மக்களுக்கு யுத்தத்தின் மீது ஒரு புதிய வெறுப்பையே ஏற்படுத்தி இருக்கும் என நம்பலாம். இதே வேளை அரச படையினரால் கண் மூடித்தனமாக மேற் கொள்ளப்படும், விமான குண்டு வீச்சுக்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும், எத்தனை எத்தனை உயிர்கள் தமிழ் பகுதிகளில் இரையாகின்றன.

நாடு முழுக்க மாவிலை தோரணங்கள், வாழைகளுக்கு பதிலாக வெள்ளைக் கொடிகளே பறக்கின்றன. சோகத்தால் கிராமங்கள் உறைந்து போய் இருக்கின்றன. தென் இலங்கையில் உள்ள சில பகுதிகளில் பல போர் வீரர்கள்
உடல்கள் ஒரே நாளில் சென்
என. இவையாவற்றையும் அ
பொருட் படுத்துவதாக தெரிய
ல்லை. கௌரவ ஜனாதிபதி அ
கள் தற் போது கலந்து கொள்
அனேக நிகழ்ச்சிகள் போரினா
பாதிக்கப்பட்ட படை வீரர்கள்
நிகழ்ச்சியாக உள்ளது.

போர் நடவடிக்கை இன்று ஒ
வியாபார விடயமாகிவிட்டது. 197
ஆண்டுக்கு முன் சாதாரண கு
துப்பாக்கியடன் இருந்த இலங்
இன்று விமானத்தை சுடும் ஏவுக
களை வாங்குகின்ற அளவுக்
யுத்தம் விரிவடைந்துள்ளது.
அதிஷ்ட்ட வசமாக இந்த யுத்
ஒரு நாட்டில் உள்ள மக்கள் மீ
நடத்தப்படுகிறது.

யுத்தத்தின் மூலம் இனப்பிர
னையை தீர்க்கமுடியாது என பே
முனையில் இருக்கும் போர் வீர
ளில் இருந்து தென் இலங்கையி
வீதியில் ஓடித்திரியும் குழந்தைக
வரை கருத்து தெரிவித்தள்ளார்க
ஆனால் அரசோ இந்த வருடத்
க்குள் போர் முடிந்து விடும் என்
ஒவ்வொரு வருடமும், கூறி வரு
ன்றது. போருக்கான நிதி ஒதுக்கீடு
நாட்டின் தேசிய வருமானத்தி
அரை பகுதியை எட்டிபிடிக்கு
நிலையில் உள்ளது. பல நாடுக
வரட்சியால், இயற்கை அழிவுகளா
வறுமையாகியது உண்டு, ஆனா
இலங்கை போரால் வறிய நாடாகி
கொண்டு செல்கிறது.

## ரீட்டா சம்பவத்தைப் போல் பல வட கிழக்கில்!

அண்மையில் இலங்கை இந்திய தம்பதிகளான ஜூட் மனோகரன், ரீட்டா ஆகிய இருவரும் திருமணமாகி, தேன் நிலவை களிக்க கொழும்பு வந்திருந்தனர். தமது வீட்டின் அயலிலுள்ள கடற்கரையான க்க்கை தீவில் உல்லாசமாக தம்பதிகள் கை கோர்த்து பேசித் திரிந்த போது, காமுகர் சிலர் திட்டமிட்டு ஜூட் மனோகரனை தாக்கி விட்டு ரீட்டாவை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி விட்டு கொலை செய்துள்ளனர். இலங்கையையே பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கிய இச் சம்பவம் பலரின் ஒன்றுபட்ட முயற்சியால் காமுகர்கள் கைது செய்யப் பட்டனர். இவ்விடயத்தில் இந்திய தூதரகம் துரித கதியில் செயற்பட்டதாலும், ஜூட் மனோகரனின் தந்தையார் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் ஆக இருந்த படியாலும் இந்தச் சம்பவம் வேகமாக வெளிச்சத்துக்கு வந்தது.

இலங்கையில் நடைபெறும் பல வன் முறைகளுக்கு அரசியல் பின்னணி பக்கபலமாக இருந்து வந்துள்ளது. ரீட்டாவின் கொலைக்கும் இப்படியான ஒர தொடர்பு இருக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

முன்னர் கொள்ளுப்பிட்டியில் கசினோ விளையாட்டு அரங்கில் பப்பூவாகினி நாட்டின் ஜனாதிபதி வேட்டாளரின் புதல்வனை சுட்டுக் கொன்றது யார் என்பது இன்றும் மர்மமாகவே உள்ளது. அன்று இந்திய சுற்றுலா பிரஜையான பழனி அம்பாந்தோட்டையில் சவரக் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அவரை கொலை செய்தவரை அன்றைய ஜனாதிபதி அவருக்கு சித்தப் பிரமையினாலேயே வெட்டினார் என்றார்.

பின்பு இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்ய இந்திய பிரதமர், ராஜீவ் காந்தி வந்து மிண்டும் திரும்பிப் போகும் போது அணிவகுப்பு மரியாதையில் வைத்து கடற் படையினரால் தாக்கப்பட்டார். அதையும் வெய்யிலில் நின்ற பிரமையினால் (SUNSTROKE) அப்படிச் செய்தார், என்றார், அன்றைய ஜனாதிபதி. இவையாவும் மேல் மட்டத்தில் நடந்தேறியவை. இலங்கையில் போரை காரணமாக வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. அண்மையில் வடபகுதியில் தந்தைக்கு முன்னாலேயே ஒரு தமிழ் மாணவி, கடற் படை வீரரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இன்னொரு சம்பவத்தில், கணவனை தாக்கி விட்டு கைக் குழந்தையுடன் நின்ற பெண்ணை கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். இன்று வடக்கு கிழக்கில் பாலியல் வல்லுறவு என்பது மிகக் சாதாரண விடயமாக மாறிவிட்டது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டு கொலை செய்து புதைக்கும் சம்பவங்கள் பல நடந்துள்ளன. சில வெளிவந்துள்ளன.

இத்தகைய கொடிய பாலியல் வல்லுறவுகளை கண்டிக்க, எமது நாட்டில் இயங்கும் பெண்கள் அமைப்புகளுக்கு திறமையில்லை. அரசு சார்பாக நின்று பெண்கள் சார்பான போராட்டங்களை நடத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் இவ் அமைப்புக்கள். வடக்கு, கிழக்கி
ஆயுதப் படையினரால், புரியப்படு
பாலியல் வல்லுறவுக்கு எதிரா
போராட தயக்கம் காட்டுகின்ற
குறிப்பாக இராதிகா குமாரசா
போன்றவர்கள் மிகப் பிரபல்ய
அடைந்தவுடன் இத்தகை
கண்டிப்பு நடவடிக்கைகளை
விட்டுள்ளனர் போல் தெரிகிறது.

இன்று இலங்கையில் பாலிய
வல்லறவு என்பது மிகப் பெரு
பிரச்சினையாக மாறியுள்ள
படையில் இருந்து விலகி வந்தவ
கள் கூட இத்தகைய நடவடிக்
களில் ஈடுபடுவதும் அண்மை
ஆய்வுகளில் இருந்து தெரியவந்
ள்ளது. நாள் ஒன்றுக்கு 65 பாலிய
வல்லுறவுகள் நடப்பதாகவு
மாதத்தில் சராசரியாக 2000 பாலிய
வல்லுறவு நடை பெறுவதாகவு
அஞ்சல் படுகிறது.

இலங்கை இனப் பிரச்சினையி
உலகில் முன்னணியில் நிற்கு
நாடுகளில் முதலிடத்தில் உள்ள

தற் கொலையிலும் இலங்கை
முதல், மதுசாரம் புகைப் பிடித்த
என்பவற்றிலும் இலங்கையே முத
இன்று பாலியல் வல்லறவிலு
பதக்கத்தை தட்டிக் கொண்டு
ளது.

இவை பற்றி அரசாங்கத்திற்கு
வெட்கமோ துக்கமோ கி
யாது.

— சிவ

இப்பத்திரிகை இல. 143/3இல் வசிக்கும் லீனஸ் ஜயதிலக்க என்பவரால், கொழும்பு—02 வேலோன் ஒழுங்கை, கொழும்பு—02 ஒஸ்வின்ன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்